# தமிழரசு

1-10-1991 ரூ.1




தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி


பெரியார்




பிறந்த நாள் விழா

# இந்த இதழில்...


சட்டப்பேரவையில்...
—மாண்புமிகு முதல்வர் உரை ... 2

உலகத் தலைவர்களில் ஒப்பற்றவர்
தந்தை பெரியார்
-மாண்புமிகு முதல்வர் உரை ... 9

பேரறிஞர் அண்ணாவின் எழுத்துச்
செல்வங்கள் நாட்டுடைமையாக்கப்படும்!
—மாண்புமிகு முதல்வர் உரை ... 13

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு —
இம்மூன்றும் இணைந்திருந்தால்
உயர்வுக்கு ஏது தட்டுப்பாடு?
—மாண்புமிகு முதல்வர் உரை ... 17

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ... 21

காந்தி வழி! (கவிதை)
—நாமக்கல் கவிஞர் ... 25

உலகவங்கி உதவியுடன் குடிநீர்
மேம்பாட்டுத் திட்டங்கள் ... 26

பொம்மைக் கண்காட்சி ... 33

நீரிழிவு நோய்-குணமும் நிவாரணங்களும் ... 37

வீரவரலாறு படைத்த செண்பகராமன் ... 42

நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் ... 44



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

புரட்டாசித் திங்கள் - 15

மலர்: 22 இதழ்: 7

1-10-1991




★ உரிமைகளை மட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை; கடமைகளைக் கருதியவர்களே மேன்மை அடைந்திருக்கிறார்கள்; கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்து அடையும்.

— காந்தியடிகள்

★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!

— ஜவகர்லால் நேரு

★ பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு, அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.

— தந்தை பெரியார்

தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

★ மனத்தில் மாசு, மதவெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!

— அறிஞர் அண்ணா

## ◉ திரைப்பட நகரம் ஒன்றை ரூ.70 இலட்சம் செலவில் உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது!

## ◉ திரைப்படங்களுக்கு ஆதரவு உதவித்தொகை வழங்குவதற்காக ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது!

## ◉ பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் கல்வி-பொருளாதார மேம்பாட்டுக்கு அரசு பல திட்டங்களை நிறைவேற்றும்!

# சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள்-செய்தித் துறை, சுற்றுலாத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை ஆகியவை தொடர்பான மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதத்தின் மீது பதிலளிக்கும் வகையில் சட்ட மன்றத்தில் 18.9.91 அன்று ஆற்றிய உரை விவரம் வருமாறு:

**செய்தித் துறை**

அரசுக் கொள்கைகளை, திட்டங்களை மற்றும் அதன் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிற துறையாகச் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது. அது மட்டுமல்லாமல் ஜனநாயக மரபுகளைப் பலப்படுத்துகிற அமைப்பாகவும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை செயல்பட்டு வருகிறது.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறைக்குத் தமிழகத்திலுள்ள நினைவகங்களைப் பராமரிக்கும் பொறுப்பு இருந்து வருகிறது. நமது போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் 'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது நினைவகம், மெரினா கடற்கரையில் அமைந்துள்ளது. அவருடைய சிறப்பினைப் போற்றுகின்ற வகையில் அவரது நினைவகம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், தற்போது இருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது நினைவகம் ரூ.70 இலட்சம் செலவில் மாற்றியமைக்கப்படும். இதற்கான மாதிரி வடிவம் தயாரிக்கப்பட்டு உள்ளது. மாற்றி அமைக்கப்பட உள்ள நினைவகத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்களுக்கு, ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலப்பரப்பில் நினைவகம் அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது மத்திய அரசே ராஜீவ் காந்தி அவர்களுக்கு நினைவகம் நிறுவ முடிவு செய்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள்



தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதில் என்னையும் ஒரு உறுப்பினராக நியமித்துள்ளார்கள். மத்திய அரசு அமைத்துள்ள இக் குழுவின் தீர்மானத்தின்படிதான் நினைவகம் நிறுவப்படும். ஆகவே, இதைப்பற்றித் தற்பொழுது மேலும் விவரங்கள் அறிவிக்க முடியாத சூழ்நிலையில் மாநில அரசு உள்ளது.

தமிழகத்தில் திரைப்படத் தொழில் என்பது பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாமல், சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. சிறந்த தமிழ்ப் படங்களை உருவாக்கும் வகையில் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. தி.மு.க. ஆட்சியிலே 1989-இல் ரூ.61 இலட்சத்தில் 27 படங்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. 1991-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியிலே 9 படங்களுக்கு ரூ.10 இலட்சமாகக் குறைக்கப்பட்டது. இந்தத் தொழில் நசுக்கப்படாமல் இருப்பதற்காக அதற்கு மென்மேலும் ஊக்கம் தேவை என்ற அடிப்படையில் ஊக்கத் தொகையாக வழங்கப்படுவதற்கு மொத்தம் ரூ.90 இலட்சம் ஒதுக்கி, அதில் ஒரு படத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் 45 படங்களுக்கு ஊக்கத் தொகை தர முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, சிறந்த தமிழ்ப் படத்திற்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டிலிருந்து பரிசுத் தொகை ரூ.1.5 இலட்சமாக உயர்த்தப்படுகிறது. இரண்டாவது பரிசு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.75 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் ஆறுதல் பரிசு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. இந்த அறிவிப்புகளைத் திரைப்படத் துறையினர் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

இந்தியாவிலேயே திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஆனால் பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் உள்ளது போல் ஒரு 'Film City' 'திரைப்பட நகர்' - சென்னையில் இல்லை என்ற ஒரு பெரும் குறை இருக்கிறது.

மேலும் இது போன்ற 'திரைப்பட நகரினை' சென்னையில் உருவாக்குவோமேயானால், அரசிற்கு மிகப் பெரிய அளவிலே வருமானம் ஈட்ட முடியும். இந்தத் திரைப்பட நகரிலே படப்பிடிப்பிற்கான அனைத்து வசதிகளும் செய்து தந்தோமேயானால், அரசுத் துறை நிறுவனங்களும், திரைப்படத் தயாரிப்பாளர்களும், தொலைக்காட்சி நிலையத்தாரும் தங்களது தயாரிப்புச் செலவைக் குறைத்துக் கொள்ள, குறைந்த செலவிலே அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும். ஆகையினால் சென்னை, அடையாறுக்கருகில் இருக்கிற தரமணியில் திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சி வளாகத்தில் உட்புற, வெளிப்புறப் படக்காட்சிகளை எடுப்பதற்குரிய சகல வசதிகளுடன் 'திரைப்பட நகர்' ரூ.70 இலட்சம் செலவில் உருவாக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு கட்டமாக 'கேபிள் டி.வி.' என்ற புதிய முறை உருவாகியுள்ளது. ஒளி நாடாக்களைப் பயன்படுத்தி அந்தந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் படக்காட்சி நிகழ்ச்சிகளைக் காட்டி வருகின்றனர். ஆரம்பக் கட்டத்தில் தொலைத் தொடர்புத் துறையின் அனுமதி பெற்றதாகக் காட்டி 'டிஷ் ஆண்டனாவைப்'ப் பயன்படுத்தி இந்நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர். தற்போது 'டிஷ் ஆண்டனா' இல்லாமல் இந்த நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன. இவை தற்போது புற்றீசல் போல் வளர்ந்துள்ளன. இந்தக் கேபிள் டி.வி. முறையை ஒரு வரையறைக்குள் கொண்டுவராவிடில் திரைப்படத் துறையிலுள்ள ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்படுவதோடு அரசுக்கும் கணிசமான அளவு வருவாய் இழப்பு ஏற்படும். வீடியோ உரிமை வழங்கப்படாத புதிய படங்களையும், இவர்கள் காட்ட முற்படுவதால் இது வீடியோ திருட்டில் போய் முடியக்கூடும். எனவே உரிமம் பெறாமல் நடத்தப்படும் கேபிள் டி.வி. நிறுவனங்கள் மீது காவல் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்துடன் வீடியோ திருட்டை ஒழிக்கவும், உரிமம் பெறாமல் கேபிள் டி.வி. மூலம் படக் காட்சிகள் நடத்துவதை முறைப்படுத்தவும், தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரிக்கார்டர் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவில் கூறியது போல், பேரறிஞர் அண்ணா, அவர்களின் எழுத்துச் செல்வங்களை எங்கள் அரசு நாட்டுடைமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளவிருக்கிறது. இந்த முயற்சியை நிறைவு செய்வதற்காக அறிஞர் பெருமக்கள் அடங்கிய குழு ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளது.

1. பேரறிஞர் அண்ணாவின் எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அவரது சிறு கதைகள், குறும் புதினங்கள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், மேடைச் சொற்பொழிவுகள் இவைகளை மலிவு விலையில் வெளியிட்டு மக்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட உள்ளது.

2. மேலும் பேரறிஞர் அண்ணாவின் ஒளிப்படங்கள் (வீடியோ டேப்ஸ்) அறிஞர் அண்ணா வரைந்த ஓவியங்கள் ஆகியவைகள் கால வரிசையில் தொகுத்து வெளியிடப் பட உள்ளது.

## துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக்கோட்டு





தமிழ்நாட்டில் உள்ள சுமார் 33 ஆயிரம் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவசமாக மழைக் கோட்டு வழங்கப்படும். தமிழ்நாட்டில் மொத்தம் 33 ஆயிரத்து 269 துப்புரவுப் பணியாளர்கள் உள்ளனர். அவர்களுக்குத் தலா ஒரு மழைக்கோட்டு இலவசமாக வழங்கப்படும். இதற்காகும் செலவு 94 இலட்சத்து 81 ஆயிரத்து 665 ரூபாய். ஒரு மழைக் கோட்டின் விலை ரூ.255 ஆகும்.

இந்தத் தொகையில் 50 சதவிகிதம் உள்ளாட்சி நிறுவனங்களால் மானியமாகவும், மீதித்தொகை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்கள் 17.9.'91 என்று அறிவித்தார்.

திருச்சி மற்றும் சேலம் நகராட்சிகள் மாநகராட்சிகளாக மாற்றப்படும் என்று தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு தமிழகச் சட்டப்பேரவையில் 17.9.91 அன்று அறிவித்தார்.

3. குறிப்பாகத் தனியாரிடமும், அரசிடமும், அகில இந்திய வானொலி நிலையத்திலும் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களது சொற்பொழிவுகளைத் தாங்கிய ஒலி நாடாக்களை (ஆடியோ டேப்ஸ்) வாங்கி, அவற்றைத் தொகுத்து 'அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது.

4. மேலும், அரசிடமும், தனியாரிடமும் உள்ள 16 எம்.எம். திரைப்படங்களை வாங்கி ஒளிப்படங்களாக (வீடியோ டேப்ஸ்-ஆக) மாற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றை 'அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் வெளியிடவும் முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நான் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவில் கூறியதுபோல், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சுயமரியாதையைப் பெற்றுத் தருவதற்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குரல் கொடுக்கவும் வைக்கத்தில் தந்தை பெரியாரால் துவக்கி வைக்கப்பட்ட போராட்டத்தை, அவர் செய்த தியாகத்தை, நினைவில் நிறுத்துகிற வகையிலும், இந்தச் சரித்திர நிகழ்ச்சியை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காகவும், தமிழ்நாடு அரசு ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க விரும்பியது. புரட்சித் தலைவர் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களால் இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்த இந்த நினைவாலயம், 'வைக்கத்தில்' விரைவில் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சுற்றுலாத்துறை**

1990-ஆம் ஆண்டினைப் பொறுத்த வரையில் இந்தியாவிலும், உலக அளவிலும் குறிப்பாக வளைகுடாப் போர் போன்ற பிரச்சினைகளால் சுற்றுலாப் பயணிகள் வருகை பெருமளவில் பாதிக்கப்பட்டது. இருப்பினும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சுற்றுலாப் பயணிகள் வருகை 1990-ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த இருபது ஆண்டுக் காலமாக, அரசின் சுற்றுலாக் கொள்கை, அரசுத் துறையில் விடுதிகள் மற்றும் பயணத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்தது. இத்திட்டங்களினால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிக விரைவாக வளர்ச்சியடைந்தது. இத்தகைய வளர்ச்சி தொடர்ந்து நீடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆனாலும், பிற்காலத்தில் ஏற்படும் சுற்றுலாத் தேவைகள் அனைத்தையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மட்டும் ஈடு செய்ய இயலாது. அதனால் சுற்றுலா முன்னேற்றத்தில் தனியார் துறையையும் ஈடுபடுத்தி, சுற்றுலாத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை 1986-லேயே உணர்ந்து, அரசு சுற்றுலாவை ஒரு தொழிலாக அங்கீகரித்து அறிவித்தது. ஆனால் புதிதாகத் தொடங்கப்படும் மற்ற தொழில்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகைகள் சுற்றுலா சார்ந்த திட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் ஒரு சில சலுகைகள் சுற்றுலாத் திட்டங்களுக்கு அளிக்கப்படவேண்டிய அவசியத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது.

வெளிநாடுகளில் இந்தியா பற்றி செய்யப்பட்டுள்ள எதிர்மறை விளம்பரங்களை முறியடித்து, வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவிற்கு அதிக அளவில் வருவதற்காக மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சுற்றுலா வருகைக்காக அயல்நாடுகளில் மத்திய அரசு செய்யும் விளம்பரப் பணியில் தமிழ்நாடு அரசும் இணைந்து செயல்படும். இந்த விளம்பரத்திற்காகத் தமிழ்நாடு அரசு மத்திய அரசிற்கு ரூ.10 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த விளம்பரச் செயல்முறை, அயல்நாடுகளில் தென் இந்தியா ஓர் உகந்த சுற்றுலா

**காவிரி யாருக்கு உரியவள்?**



சோழ நாடானது 1,500 ஆண்டுகளுக்கு முன்பு பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மன் ஆட்சியின்கீழ் இருந்தது. அவன், காவிரியாற்றின் மீது மிகுந்த காதல் கொண்டிருந்தான். இதைச் சொல்லியே- கவின்மிகு காவிரி மீது தன் கணவனின் பார்வையும் விழாதபடி பார்த்துக் கொண்டாளாம் உமாதேவி!

இதைப்பற்றித் திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையில் அவனே உருவாக்கிய குடைவரைக் கோயிலில் ஒரு கவிதை காணப்படுகிறது. பல்லவ கிரந்த எழுத்தில் காணப்படும் அந்தக் கவிதையின் பொருள் வருமாறு:

'நதிகளிடம் மிகவும் ஆசை கொண்டவனான (நதிப்பிரியன்) சிவபெருமான், கண்களுக்கு இனிய- குளிர்ச்சியான தெளிந்த நீரையும், வரிசையாக உள்ள கோயில்களான ஆபரணங்களையும், விரும்பத்தக்க பல நற்பண்புகளையும் உடைய வளாகிய காவிரிப் பெண்ணைப் பார்த்துவிட்டு, அவள் அழகில் மயங்கிக் காதலுற்று விடுவாரே என்று அஞ்சினாள் மணியரசனின் மகள் உமாதேவி; ஆகவே, அவள் தன் தந்தையின் இருப்பிடமான இமயமலையை விட்டுவிட்டு- இங்கு திருச்சிராப்பள்ளி மலைக்கு வந்து, சிவனருகில் நகராமல் இருந்துகொண்டு- ''இக் காவிரிப் பெண் பல்லவனுக்கே உரியவள்'' என்று அழுத்தமாகக் கூறியவாறே இருக்கிறாள்!'



உறைவிடம் என்பதை உணர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும். எல்லாத்தென் மாநிலங்களும் இந்த ஒருங்கிணைந்த விளம்பரத்திற்காகச் செலவைப் பகிர்ந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைந்து செயல்படும் விளம்பர ஏற்பாடு தகுந்த பயன்தருமாயின், இந்திய அரசாங்கம் இந்த ஒருங்கிணைந்த விளம்பரப்படுத்தும் பணியினை ஒவ்வோர் ஆண்டும் செயல்படுத்தக் கேட்டுக் கொள்ளப் படும்.

தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையினை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' 1990- 91-ஆம் ஆண்டில் நல்ல முன்னேற்றத்தினைக் கண்டுள்ளது. இருப்பினும் அரசுத் துறையுடன் தனியார் துறையும் இத்துறையில் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இந்த அரசு அதற்கான திட்டங்களைத் தீட்டி, அவ்வகையில் ஈடுபடுவோருக்கு நல்ல சில சலுகைகளையும் விரைவில் அறிவிக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க, முக்கியமான தமிழகத்து விழாக்கள் மற்றும் பண்டிகைகளை மிகச் சிறந்த முறையில் கொண்டாட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு இதற்காக ரூ.10 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

சுற்றுலா சொகுசுப் பேருந்துகளின் வரியை இருக்கைக்கு ஒரு காலாண்டுக்கு ரூ.2,000 என இருந்ததை ரூ.500 என அதே கால அளவிற்கு ஏற்கெனவே அரசு குறைத்து அறிவித்துள்ளது. இதனால் பயணச் செலவுகள் குறைக்கப்பட்டு, சுற்றுலா மேம்பாட்டையும், இவ்வரி குறைப்பு தவறான வழியில் பயன்படுத்துவதைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

நடப்பு ஆண்டில் (1991-92)-இல் முக்கியத் தமிழகத் திருவிழாக்களும், பொருட்காட்சிகளும் சிறந்த முறையில் நடத்தப்படும்.

வைகை அணை, சாத்தனூர் அணை, மேட்டூர் அணை ஆகிய மூன்று சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தி அவர்களுக்குத் தங்க இடம், உணவு விடுதிகள், பூங்கா மற்றும் தோட்டங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு மையங்கள் ஆகியவை அமைக்கப்படும்.

கீழே குறிப்பிட்ட திட்டங்களைத் தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவியுடன் நடப்பு ஆண்டில் செயல் படுத்த உள்ளது.

1. உதகையில் ரூ.20 இலட்சம் செலவில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல்.

2. கொடைக்கானலில் ரூ.30 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகக் குடில்கள் அமைத்தல்.

3. ரூ.20 இலட்சம் செலவில் பல்வேறு சுற்றுலா இடங்களுக்குப் படகு வாங்குதல்..

4. மேலும் மத்திய அரசு கீழே குறிப்பிட்ட திட்டங்களுக்காக ரூ.10 இலட்சம் அளித்துள்ளது.

அ. மாமல்லபுரத்தில் தொல்பொருள் சின்னங்களுக்கு ஒளிவிளக்கு அமைத்தல்.

ஆ. கொடைக்கானல் மலைப் பகுதிகளில் மலை ஏற்றம் ஊக்குவித்தல்.

இ. விழா மற்றும் பண்டிகைகள் நடத்துதல்.

மேல் குறிப்பிட்ட திட்டங்களுக்கு நிலத்தை மாநில அரசு வழங்கி வெளிப்புறப் பணிகளையும் மேற்கொள்ளும். மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிக்கப்பட்ட திட்டங்களை அழகுபடுத்துவதற்கு மற்றும் எடுத்து நடத்துவதற்

# அதங்கோட்டாசான் விழா!

மூன்று தமிழ்ச்சங்கங்களில் - இடைச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர்களுக்குள்ளே தலைசிறந்தவர் என்றும், தொல்காப்பியம் அரங்கேற்றும் போது அவைத் தலைமை வகித்தவர் என்றும் புகழப்படும் தமிழ்ப் பெரும் புலவர் அதங்கோட்டாசானின் விழா, அவர் பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அதங்கோட்டில் 6.9.91 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அவர் பெயரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையில், அன்று பிற்பகல் 4.00 மணிக்கு வழக்காடு மன்றம் துவங்கியது. வழக்காடு மன்றத்திற்கு ஆலங்கோட்டை சிறுகதைத் தென்றல் திரு கணபதி தலைமை தாங்கினார். 'குடும்பத் தலைமையை மனைவி ஏற்பது குற்றம்' என்று புலவர் பா.லாசர் அவர்கள் வழக்குத் தொடுத்தார். அதை மறுத்து, புலவர் கொ.கோவிந்தநாதன் எதிர் வழக்காடினார். வாதங்களைக் கேட்ட பின்னர் மன்றத் தலைவர் - குடும்பத் தலைமையை இன்றைய சூழ்நிலையில் மனைவியும் ஏற்கலாம் என்று தீர்ப்புக் கூறினார்.

அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் திரு எஸ்.துரைராஜ் விழாவிற்குத் தலைமை வகித்தார். திரளாக வருகை தந்த பொதுமக்கள், விருந்தினர்கள் மற்றும் ஏனையோரையும் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு வை. புண்ணியமூர்த்தி வரவேற்றுப் பேசினார். அடுத்து, பேராசிரியர் திரு இரா.தியாகசுவாமி, புலவர் கொ.கோவிந்தநாதன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு என். குசேலப்பிரசாத் ஆகியோர் அதங்கோடு தந்த ஆசானின் பெருமைகளைக் குறித்துச் சிறப்புரை ஆற்றினார்கள். பின்னர் விழாத் தலைவர் அவர்கள் அதங்கோட்டாசான் திருவுருப் படத்தினைத் திறந்து வைத்துத் தலைமையுரையாற்றினார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையினால் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அடுத்து, பள்ளிச் சிறார்களால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சி கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

விழா இறுதியாக, பள்ளித் தலைமையாசிரியர் திரு எம். சையது உசேன் அவர்கள் நன்றி கூறினார்.

காக உண்டாகும் செலவினைத் தேவைப்பட்ட திட்டங்களுக்கு மேற்கொள்ளும். மத்திய அரசு உதவியுடன் செயல்படும் மேலே குறிப்பிட்ட திட்டங்கள் அல்லாமல் மேலும் சில முக்கியத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு 1991-92-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களை எடுத்து நடத்தவிருக்கிறது.

1. ஒருங்கிணைந்த விளம்பரச் செயல்முறை ரூ. 10 இலட்சம்.

2. விழா மற்றும் பண்டிகைகள் ரூ.10 இலட்சம்

3. மாவட்ட உலா மையங்கள் ரூ. 6 இலட்சம்

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் அழகு மேம்படுத்த ரூ.11.33 இலட்சம்.

சுற்றுலா முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை அமைத்துத் தர வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 24 விடுதிகள் 11 இளைஞர் விடுதிகள் 2 சுற்றுலா வளாகங்கள், 4 உணவகங்கள், 8 படகுக் குழாம்கள், 4 தொலைநோக்கி நிலையங்கள், ஒரு வழித்தட வசதி நிலையம், 2 சிறு பூங்காக்கள் மற்றும் சிற்றுண்டி நிலையம் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இக்கழகத்தின் விடுதிகள் பெரும்பாலும் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் உள்ள பயணிகளின் தேவைகளை நிறைவு செய்கின்றன. ஒருசில விடுதிகளில் நட்டம் ஏற்பட்டாலும்கூட சுற்றுலா முன்னேற்றம் கருதி அவைகளைத் தொடர்ந்து இக்கழகம் நடத்தி வருகிறது.

இக்கழகத்தின் வாகனப்பிரிவில் 22 சொகுசுப் பேருந்துகள் இயங்குகின்றன. இக்கழகம் நடத்தும் சில சுற்றுலாக்கள் மிகவும் பிரபலமடைந்தவை.

கடந்த 17 ஆண்டுகளாக வருடாந்திரச் சுற்றுலாத் தொழிற்பொருட்காட்சியைச் சென்னையில் தீவுத்திடலில் இக்கழகம் நடத்தி வருகிறது. கடந்த 1990-91-ஆம் ஆண்டில் சுமார் 30 இலட்சம் பேர் இப்பொருட்காட்சிக்கு வருகை புரிந்துள்ளனர்.



★ ஜனநாயகவாதி சிறிதளவும் சுயநலமில்லாதவனாக இருக்க வேண்டும்; அவனுடைய கருத்தும் கனவும் ஜனநாயகத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

—காந்தியடிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இவ்வாண்டு இலாபம் ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளிலும் அதன் வளர்ச்சி மேலும் பெருகி, தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் வரவு அதிகரிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

சமூக நீதியைக் காத்திட-சமுதாய நிலையிலும், கல்வித் துறையிலும் பிற்படுத்தப்பட்டோரைக் கைதூக்கி உயர்த்தி முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காகக் கல்விச் சலுகைகள், கல்வி நிறுவனங்களிலும், அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களிலும் உரிய ஒதுக்கீடு வழங்குதல், பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் இருந்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட இனத்தவர்க்குக் கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் தனி ஒதுக்கீடு தரப்படுதல் வேண்டும் என்ற இலட்சியத்திற்கு ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு என்பதை அனைவரும் அறிவர்.

இந்த இலட்சியத்திற்கு 1921-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக இந்த மாநிலத்தில்தான் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு முதல் கம்யூனல் ஜி.ஓ. (First Communal G.O.) என்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவு வெளியிடப்பட்டது. இந்த இலட்சியம் மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாகப் பரிணாம வளர்ச்சி பெற்று நமது புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் சேருவதற்கு 50 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை செயல்முறைக்கு வந்தது. அத்தகைய பரிணாமத்தின் தொடர்ச்சியாகத்தான், மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்துகையில், 50 சதவிகித இடஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தும் என்ற உறுதியான நிலையை இவ்வரசு மேற்கொண்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் மீண்டும் ஒரு முறை அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த 50 சதவிகித ஒதுக்கீடு என்பது ஏதோ அதிகமாகக் கேட்கவேண்டுமென்ற காரணத்தால் சொல்லப்படுகின்ற ஒன்றல்ல. நமது மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் சுமார் 67 சதவிகிதம் பேர் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மக்களாவார்கள். மண்டல் கமிஷன் பரிந்துரைகளிலேகூட இந்திய நாட்டு அளவில் பிற்படுத்தப்பட்ட மக்கள் மொத்த மக்கட் தொகையில் 52 சதவிகிதம் பேர் உள்ளனர் என்ற குறிப்பு உள்ளது. எனவே, நாம் வலியுறுத்தி வரும் 50 சதவிகித இடஒதுக்கீடு என்பது அசைக்க முடியாத மக்கட் தொகைப்புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் கல்வி மற்றும்



• எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல. அதுபோலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள். இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

பொருளாதார மேம்பாட்டிற்காக, 1991-92-ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை அரசு செயல்படுத்த எண்ணியுள்ளது:

1. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்காக ரூ.65.85 இலட்சம் செலவில் 7 மாணவரில்லங்கள் கட்டப்படும்.

2. 5 நடுநிலைப் பள்ளிகள் ரூ.5.98 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்;

3. பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 50 நபர்களுக்கு ரூ.1.72 இலட்சம் செலவில் கனரக வண்டிகள் ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படும்;

4. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 125 மாணவ, மாணவியர்களுக்காக ரூ.1.65 இலட்சம் செலவில் கணிப்பொறிக் கல்விப் (கம்ப்யூட்டர்) பயிற்சியளிக்கப்படும்;

5. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 450 மாணவ மாணவியர்களுக்கு ரூ.5.40 இலட்சம் செலவில் சுருக்கெழுத்துப் பயிற்சியளிக்கப்படும்;

6. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககத்தில் ரூ.1.50 இலட்சம் செலவில் புள்ளி விவரப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்;

7. தற்போது இயங்கி வரும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களுக்கு ரூ.9.96 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகள் செய்து தரப்படும்;

8. சீர்மரபின மாணவ, மாணவியர் படிக்கும் இரண்டு பள்ளிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக் கூடமும், வகுப்பறைகளும் கட்டித் தரப்படும்.

9. மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குச் சிறுபாசன வசதிகள் செய்து தரப்படும். இதற்காக 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர மேலும் இரண்டு சலுகைகளை இந்த அவையில் அறிவிக்கிறேன்.

1. உயர்நிலைப் பள்ளிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ- மாணவியருக்காக 746 மாணவர் இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 42,969 மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர். எனினும், மாணவ, மாணவியருக்கான விடுதிகள் மேலும் அதிகமாகத் துவக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவியர்கள் கல்விக்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் நோக்கத்தோடு இந்த நிதி ஆண்டில் மேலும் 25 விடுதிகள் திறக்கப்படும். விடுதி ஒன்றுக்கு 50 மாணவியர் வீதம் மொத்தம் 1,250 மாணவியர்கள் கூடுதலாகப் பயன்பெறுவர். இந்தப் புதிய விடுதிகளைத் திறப்பதற்கான மொத்தச் செலவினம் ரூ.57.50 இலட்சம் ஆகும்.

2. தற்பொழுது பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் படிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்க்கு, அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேற்படாமல் இருந்து, இதுவரையில் பட்டதாரி எவரும் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவர்கள் கல்விக் கட்டணங்கள், கல்விச் சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

அதேபோலப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் படிக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்க்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கல்விக் கட்டணங்கள், கல்விச் சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து இனி விலக்களிக்கப்படும்.

1. பெற்றோரின்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ.12,000- க்கு மேற்படக் கூடாது.

2. இதுவரையில் பட்டதாரிகள் எவரும் இல்லாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக அம்மாணவ மாணவியர் இருக்க வேண்டும்.

அத்தோடு, மாணவரில்லங்களின் பராமரிப்பைச் சீரமைக்கும் நோக்கத்தோடு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரைத் தலைவராகவும், பெற்றோர் சங்கப் பிரதிநிதிகளில் இருவர், ஆசிரியப் பிரதிநிதிகளில் இருவர், மாணவரில்லத்தின் காப்பாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு ஒவ்வொரு மாணவரில்லத்திற்கும் நிர்வாகக் குழுவொன்றை அமைத்திட இவ்வரசு கருதியுள்ளது. இந்த நிர்வாகக் குழு மாணவரில்லங்களில் பராமரிப்பைத் தொடர்ந்து சீரமைத்துக் கண்காணிப்பதிலும், மாணவ, மாணவியரின் ஆரோக்கியமான

மேம்பாட்டுக்குரிய நடவடிக்கை களை மேற்கொள்வதிலும் பெரிதும் உதவிகரமாக இருக்குமென்று நாம் நம்புகிறோம்.

தமிழ்நாட்டில் நாடோடிகளாக வாழ்ந்துவரும் . நரிக்குறவர்களைத் தக்க இடங்களில் தங்கச் செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உறுதி யான எண்ணம் இந்த அரசுக்கு உள்ளது. எனினும், நரிக்குறவர்கள் தங்களது நாடோடி வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ளும் எண் ணப்போக்கு இல்லாமல் இருந்து வருகிறார்கள். இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப் படும் சலுகைகள் அனைத்தையும் பெறுகின்ற உரிமை உடையவர்கள். ஆனால் இச்சலுகைகளை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளு வதில்லை.

இவர்களுக்காகத் திருச்சிராப் பள்ளி மாவட்டம், தேவராயநேரி மற்றும் திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டம் அரும்பருத்தி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் அமைத்து நிரந்தரமாக அவ்விடங்களில் குடியிருக்கச் செய்ய மேற்கொண்ட முயற்சிகள் முழுமை யாகப் பலன் அளிக்கவில்லை. என்றாலும், நரிக்குறவர்களை நாடோடி வாழ்க்கையிலிருந்து மீட் டாக வேண்டும். இவர்கள் நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு, தக்க இடங்களில் நிலையாகக் குடியிருக்க முன்வருவார்களேயானால் அவர் களுக்கு இலவசமாகத் தொகுப்பு வீடுகளை இந்த அரசு அமைத்துக் கொடுக்கும் என்பதனையும், அவர்கள் தக்க தொழிலை ஏற்று நடத்துவதற்கான எல்லா உதவிகளை யும் அரசு செய்யும் என்பதையும் இந்த அவையில் அறிவிக்கிறேன்.

இந்த நிலையில், பிற்படுத்தப்பட் டோரின் கல்வி மற்றும் பொருளா தார மேம்பாட்டிற்கு ஒதுக்கீட்டுக் கொள்கை மாத்திரம் நாம் எதிர் பார்க்கும் விளைவுகளை முழுமை யாக விரைவில் ஏற்படுத்திவிடாது. இன்றைய மாநிலங்களின் நிதி நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில், பிற்படுத்தப்பட்டோரின் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்க முடி யாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்த நெருக்கடியைப் போக்கிட, மத்திய அரசு உதவிக்கரம் நீட்ட முன் வர வேண்டும்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் கிராமக் கைவினைஞர்கள் மற்றும் கைத்தொழிலையே நம்பி வாழும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் பொருளாதார மேம்பாட்டுக்கு அகில இந்திய அளவில் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயல் படுத்த மத்திய அரசு சிந்தனை செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட் டோரின் நல்வாழ்வுக்கெனத் திட்டங் களைத் தீட்டிச் செயல்படுத்தும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு போதிய நிதியுதவி வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த மாமன்றத்தின் மூலமாக எழுப்புவது என்னுடைய கடமையாகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாட்கள் வரும் இந்த மாதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மானிய விவாதத் தில் இந்தக் கோரிக்கையை வைப்பது மிகப் பொருத்தமாகும் என்று நான் கருதுகிறேன்.

## பெரியார் பேசுகிறார்



- மனிதன் உலகில் தன் மானத்தை- சுயமரியாதையை- தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும்.

- மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது சிரமமான காரியம்.

- நம் மக்கள் சமுதாயமானது பல சாதி, பல மதம், பல பிரிவாக இருக்கிறது. நம் நாட்டிலிருக்கிற மனித சமுதாய பேதம் ஒழிய வேண்டும். இதை எவனோ ஒருவன் செய்யட்டும் என்று இருக்கக் கூடாது. நாம் ஒவ்வொருவம் நம் சமுதாயத்திற்காக ஏதாவது செய்யவேண்டுமென்று கருத வேண்டும்.

- மானத்தைப் பற்றிக் கவலை இல்லாதவன் எவ்வளவு படித்தவனானாலும், அவனது படிப்பும் மானாபிமானம் உள்ளவர்களுக்கு ஆபத்தாகவே முடியும்.

- சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு நியாயமோ, அதுபோல கல்வி இல்லாதவனுக்குக் கல்வி கொடுக்கவும் வேண்டும்.

- நமது கல்வி முறை மாறவேண்டும். படிக்கும்போதே அத்துடன் தொழிலும் பயில வேண்டும். எந்த வகுப்பில் ஒருவன் படிப்பை நிறுத்தினாலும், அவன் தொழில் செய்து பிழைக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். மக்கள் அத்தனைப் பேரும் தொழில் பழகியவர்களாக இருக்க வேண்டும்.




பெண்கள் முன்னேற்றத்திற்கு உழைத்த

# உலகத் தலைவர்களில் ஒப்பற்றவர் தந்தை பெரியார்

## மாண்புமிகு முதல்வர் புகழாரம்!

**த**லைவர்களுக்கெல்லாம் தலைவர் என்கிற தகுதியும், தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தமாகவும், பகுத்தறிவுப் பகலவனாகவும், சமுதாய மேம்பாடு, முற்போக்கு எண்ணங்கள், புரட்சிகரச் சிந்தனை ஆகியவற்றைத் தனது வாழ்நாள் முழுவதும் கட்டிக் காத்து வளர்த்து, வெற்றி கண்ட தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

வாயளவிலும், நூல் அளவிலும் சொல்லப்பட்ட எத்தனையோ சீர்திருத்தக் கருத்துக்களுக்குச் செயல் வடிவம் பெற்றுத்தர, அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், அவரது உறுதியும், அஞ்சாமையும், சரித்திரப் புகழ் பெற்றவை.

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும் வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாட்டில் தான் அவருக்கு வழங்கப்பட்டது.

ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும். இதைச் சகோதரர் வீரமணி அவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியும்!

ஒரு பெண்ணை முதலமைச்சர் ஆக்கியிருக்கிற தமிழகத்தின் பெருந்தன்மைக்கு, தொலைநோக்குப் பார்

வைக்கு, அரசியல் துணிவுக்கு, தந்தை பெரியாரின் பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்களே உரமாய், ஊக்கமாய் இருந்துள்ளது என்பதை எவரும் மறுத்திட இயலாது.

தந்தை பெரியார் அவர்கள் இன்று நம்மிடையே இருந்தால், ஒரு பெண் தமிழகத்தின் முதல்வராய் இருப்பதைக் கண்டு பேரானந்தம் கொண்டிருப்பார்; பெருமகிழ்ச்சி அடைந்திருப்பார்; பெருமைப்பட்டிருப்பார். ஏனெனில், தனது வாழ் நாள் இலட்சியங்களில் மிக முக்கியமான பெண்ணுரிமை மேம்பாட்டிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக இதைக் கருதியிருப்பார்.

சமுதாயச் சிந்தனைகளின் மூலம் புரட்சிக் கனல் வீசிய பெரியாரின் மென்மையான குணங்களைப் பற்றிப் படித்து, நான் நிறைய சந்தர்ப்பங்களில் மெய்சிலிர்த்துப் போயிருக்கிறேன்.

குறிப்பாக, நட்புக்குத் தமிழகத்தில் இலக்கணம் வகுத்தவர் தந்தை பெரியார்தான் என்றால் அது மிகையாகாது. 'ஈ.வே.ரா. அவர்களுக்கும், எனக்கும் உள்ள அகநகும் நட்பு யார் என்ன சொன்னபோதிலும் என்றும் குறையாது' என்றார் அவரது நண்பர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இராஜாஜி அவர்கள் மறைந்தபோது, அந்த இழப்பைத் தாங்காது குலுங்கிக் குலுங்கிக் கண்ணீர் விட்டு அழுதவர் தந்தை பெரியார். இருவருக்கும் கொள்கையில் பெரிய வித்தியாசம், ஆனால் கொண்டிருந்த நட்பில் அழுத்தமான பிடிப்பு; ஆழமான பாசம்! அரசியல் கட்சியிலிருக்கிற தலைவர்கள் பின்பற்ற வேண்டிய உன்னதமான பாடம் இது. பிரான்ஸ் நாட்டுத் தத்துவ மேதை வால்டரின் கூற்றுப் படி, 'நீ சொல்வதை நான் ஏற்காமல் போகலாம். ஆனால் அதை நீ சொல்வதற்கான உரிமையை, என் உயிர் கொடுத்தேனும் காப்பேன்'.

கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பு அளிப்பது சாதாரண மனிதர்களுக்கு இயல்பாகவே வராது; சரித்திரப் புருஷர்களுக்கு மட்டுமே அது சாத்தியம். அந்த வகையில் பெரியார் அவர்களை அணுகி ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கிற அனுபவங்கள் ஏராளம்.

தேசிய கீதம் இசைக்கப்படுகிற போது தள்ளாத வயதிலும் அவர் எழுந்து நிற்கிற பாங்கும், குறைந்த வயதுடையவர்களையும் 'வாங்கய்யா' என்று அவர் கூப்பிடுகிற நேசமும், தந்தை பெரியார் அவர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

தமிழ்நாட்டின் தலைவர்கள் எல்லாம் தந்தை பெரியாரைப் பற்றிப் புகழ்வதற்குக் காரணமே அவரிடம் இருந்த நேர்மை, நியாயம், கொள்கை உறுதி, வெற்றியை ஈட்டவிடா முயற்சி ஆகியவைகள்தான். நமது நாட்டில் தலைவராகவே தோன்றி, தலைவராகவே ஒருவர் மறைந்தார் என்றால் அவர் தந்தை பெரியார் ஒருவர்தான்!

நமது பாசத்திற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான் கண்ட ஒரே தலைவர், நான் கொண்ட ஒரே தலைவர் பெரியார்தான்' என்றும், 'பெரியார் ஒரு தனி மனிதரல்ல; அவர் ஒரு சகாப்தம்' என்றும் தந்தை பெரியாருக்குப் புகழாரம் சூட்டினார். ஏனென்றால் தமிழர்களுக்கு வழிகாட்டியதோடு மட்டுமல்லாமல், தமிழகம் வளர்வதற்கான விஞ்ஞானச் சிந்தனைகளைத் தமிழ்நாட்டில் மன தைரியத்தோடு அறிமுகப்படுத்துவதற்கு அடிகோலியவர் தந்தை பெரியார்தான்.

இந்த வகையில், மக்கள் தொகை குறைப்பிற்காகக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை அந்த நேரத்திலேயே ஆதரித்துப் பேசுகிற ஆற்றலும், தைரியமும் அவருக்கே இருந்தது! அதுமட்டுமல்ல, இன்றைக்குத் தமிழக அரசுக் குறிப்புகளில் நாம்

## தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

**த**ந்தை பெரியாரின் 113-வது பிறந்த நாள் விழா சென்னை கலைவாணர் அரங்கில் தமிழக அரசின் சார்பில் 17.9.91 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, தந்தை பெரியார் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துச்சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.க.இராசாராம், கல்வி அமைச்சர் திரு.இராம வீரப்பன், வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், சட்ட அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி.வீரமணி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விழா முடிவில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ மாணவிகளுக்குப்பரிசுகளும், ரூ.15 இலட்சம் மதிப்பில் 361 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன.

முன்னதாக செய்தி மற்றும் சுற்றுலாத்துறை முதன்மைச் செயலர் திரு. கே.ஜே.எம்.ஷெட்டி இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

விழாத் தொடக்கத்தில் பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன.

—நிகழ்ச்சித் தொகுப்பு
ஜே.சந்திரன்



**தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவின் போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

பயன்படுத்துகிற எழுத்துச் சீர்திருத்தத்திற்குத் தந்தை பெரியாரின் எண்ணங்களே வழிமுறைகளாகவும், அடிப்படையாகவும் இருந்தன. தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டு அதைச் செயல்படுத்த ஆணையிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் இந்த நேரத்தில் நினைவுகூர்வது மிகப் பொறுத்தமாகும்.

நமது பெரியாரின் சாதனைச் செயல்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே வரையறுக்கப்பட்டவை அல்ல. வைக்கம் வீரரின் வரலாற்று உண்மைகள் ஒவ்வொரு தமிழனும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு பாடமாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சுயமரியாதையைப் பெற்றுத் தருவதற்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குரல் கொடுக்கவும், தந்தை பெரியார் துவக்கிய போராட்டம் தான் வைக்கம் போராட்டம்!

இந்தப் போராட்டத்தில் தந்தை பெரியார் சிறைப்பட்டதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தனது மனைவி நாகம்மையாரையும் போராட்டத்தில் கலந்துகொள்ள வைத்தார். இறுதியில் சத்தியாகிரகம் வெற்றி பெற்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயத் தெருவில் நடக்கும் உரிமை வழங்கப்பட்டது.

தந்தை பெரியாரின் இந்தத் தியாகத்தை நினைவில் நிறுத்துகிற வகையிலும் இந்தச் சரித்திர நிகழ்ச்சியை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காகவும், தமிழ்நாடு அரசு ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க விரும்பியது. புரட்சித் தலைவர் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அவருக்குப் பின் வந்தவர்களால் இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்து இந்த நினைவாலயம், வைக்கத்தில் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரளத்தில் மட்டுமல்ல; தமிழகத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களின் இன்றைய உயர்ந்த வாழ்க்கை நிலைக்கும், பெருமைக்கும், பெரியார்தான் காரணம் என்றால் அதனை எவராலும் மறுக்கவும் முடியாது; மறக்கவும் முடியாது.

எடுத்துக்காட்டுக்களாகச் சொல்லப்படுகிற வகையில் இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் அவர் வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளன.

தந்தை பெரியாரின் வழியிலிருந்து வழுவாது, அவர் காட்டிய பாதையில் சமுதாய சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டு வரும் சகோதரர் வீரமணி அவர்கள் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை பெரியாரால் வளர்க்கப்பட்டு, கல்வி அறிவு மட்டுமல்லாமல் கொள்கை அறிவும் ஊட்டப்பட்டவர் சகோதரர் வீரமணி அவர்கள். சில நாட்களுக்கு முன்பு அவர் உடல்நலக் குறைவு காரணமாக வெளிநாடு சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்கள். சகோதரர் வீரமணி அவர்கள் எல்லா நலனும் பெற்று நீண்ட ஆயுளுடன் தந்தை பெரியார் அவர்களின் சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்ற என்னுடைய ஆவலை நம் அனைவரின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாய சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்றித் தந்தை பெரியார் அவர்கள் அடைந்திருக்கும் வெற்றியும், ஜாதி ஒழிப்பில் அவர் ஏற்று இருந்த இலக்கும், என்றென்றும்



**விழாவின்போது தந்தை பெரியார் பிறந்த நாள் விழா பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவனுக்குப்பரிசு வழங்குதல்**

இனி வரும் தலைமுறையினர் நினைவு வைத்துக் கொள்ள வேண்டிய சரித்திர நிகழ்ச்சிகளாகும். பெரியார் இன்று நம்மிடம் இல்லை; ஆனால் அவர் நமக்கு விட்டுச் சென்றிருந்த சமுதாய மேம்பாட்டுக் கொள்கைகளும், ஜனநாயக வழிமுறைகளும் நம்மிடையே நிலைத்து நின்றுவிட்டன. நமக்குப் பின்னால், வரும் சந்ததியினருக்கும் அவை வழிகாட்டுதல்களாக அமைய வேண்டுமென்ற பேராவலினால் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் என்ற அறக்கட்டளைக்கு அ.இ.அ.தி.மு.க. சார்பில் 5 இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்குகிறேன். இந்த அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு சகோதரர் வீரமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மண்டல் கமிஷன் பற்றிச் சகோதரர் வீரமணி பேசினார். மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த வேண்டும். அவ்வாறு அமல்படுத்தும்போது மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தமிழகச் சட்டமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரிலேயே தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை வற்புறுத்துவோம். பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்கள், சிந்தனைகள் பாடநூல்களில் இடம் பெறுவது பற்றியும் சகோதரர் வீரமணி விடுத்த மற்ற கோரிக்கைகள் பற்றியும் அரசு பரிசீலித்து விரைவில் நல்ல முடிவுகள் அறிவிக்கப்படும்.

தந்தை பெரியாரால் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள பெருமை அளப்பரியது; ஆராதனைக்குரியது! அந்த வரலாற்று நாயகருக்கு; தமிழகத்தின் வழிகாட்டிக்கு; சீர்திருத்தச் செம்மலுக்கு; பகுத்தறிவுப் பாசறைக்கு, அவரது இந்தப் பிறந்த நாளில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ●

## சட்டப்பேரவையில்...

**வேலூர், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் தொழில் நீதிமன்றங்கள் தொடங்கப்படும். ஏற்கெனவே சென்னை மதுரை நகரங்களில் உள்ள கூடுதல் தொழில் நீதிமன்றங்கள் கடலூர், நெல்லைக்கு மாற்றி அமைக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தமிழகச் சட்டப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு.அரங்கநாயகம் அவர்கள் (16.9.91) அறிவித்தார்.**

**கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டறிந்து, பெண் சிசுவானால் கொன்றுவிடும் கொடுமை இருப்பதால், அவ்வாறு கண்டறிய நடத்தப்படும் சோதனை தடை செய்யப்படும் என்று தமிழகச் சட்டப்பேரவையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.முத்துசாமி அவர்கள் (16.9.91) அறிவித்தார்.**

# பேரறிஞர் அண்ணாவின்
# எழுத்துச் செல்வங்கள்
# நாட்டுடைமையாக்கப்படும்!

## மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பு

இன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள், தமிழர்களின் வாழ்க்கையிலும், ஏழை எளியவர்களின் நெஞ்சத்திலும் நீங்காத நிலையான இடம் பெற்றுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-வது பிறந்த நாள் விழா.

இந்த விழா இன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், எனக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிபூரண ஆசிகள் உள்ளன என்று நம்புகின்றேன். ஏனெனில், அவரது இன்றைய 83-வது பிறந்த நாள் விழா, நான் முதலமைச்சராக 83 நாட்கள் பணியாற்றியுள்ள இத்தருணத்தில் சீரிய முறையில் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. நான் இந்தச் சீரிய விழாவில் முதலமைச்சராகப் பங்கேற்கின்றேன் என்றால் அதனை என்ன என்று கூற முடியும்? அது மட்டுமல்ல, நான் இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பாராளுமன்ற உறுப்பினராக் கப்பட்டு, பாராளுமன்றம் சென்ற பொழுது எனக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை எண்:185 பேரறிஞர் அண்ணா அவர்களால் அலங்கரிக்கப்பட்ட இடமாகும். பண்டித நேரு அவர்களால் பாராட்டப்பட்ட மாபெரும் பாராளுமன்ற உரையினை அவர் நிகழ்த்திய ஆசனம் என்று நான் அறிந்ததும், அதனை வணங்கிய பின்னர்தான் அதில் அமர்ந்தேன். அன்று முதல் என் அரசியல் வாழ்க்கையில் பல சோதனைகளும் வேதனைகளும் எதிர் கொண்டபொழுதும், என்னால் சில சாதனைகளையும் புரிய முடிந்தது என்றால் அது பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிபூரண ஆசியுடன் தான் என்று நம்புகின்றேன்.

### பாடமும் பாதையும்

ஜனநாயகத்தில் மக்கள் சக்தி தான் திறமையுள்ள சாதாரண மனிதர்களையும் சரித்திரப் புருஷர்களாக்கி இருக்கிறது. எனவே, தலைவர்களது நேர்மையும், நிதானமும், விழிப்புணர்ச்சியும், தியாகமும், பணிவும் நமக்குப் பாடங்களாகவும், நாம் நடக்க வேண்டிய பாதைகளாகவும் அமைந்துள்ளன.

அண்ணா அவர்களது பிறந்த நாளும், தந்தை பெரியார் அவர்களது பிறந்த நாளும் நம் தலைவர்களுக்கு நாம் வணக்கம் செலுத்துகிற நாட்கள் மட்டுமல்ல, அவை நமது பாரம்பரியமிக்க வரலாற்றுப் பாதைகளில் நாம் சரியாக நடக்கிறோமா என்பதைச் சரிபார்க்கும் நாட்களும் ஆகும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அண்ணா நமக்கு அனைத்திலும் வழிகாட்டியாக இருந்தவர். தனிப்பட்ட முறையில் அவருக்கு அவமானம் இழைக்கப்பட்டபொழுது கூட அவர் அமைதியாக இருந்தார். ஆனால், தனது மொழிக்கும், இனத்திற்கும், பண்பாட்டிற்கும் இன்னல் வந்தபொழுது எல்லாம் அவர் கனலாய்த் திகழ்ந்தார். அண்ணா நிதானமானவர்; அண்ணா பொறுமையானவர்; அண்ணா பண்பானவர் என்பது அவரின் ஒரு பக்கம்! தமிழக மக்களின் உரிமை, சுயமரியாதை பாதிக்கப்பட்டபொழுதும் தனது தாய்மொழியைச் சிதைக்க முயற்சித்தபொழுதும் கொதித்து எழுந்தவர் அண்ணா என்பது அவரின் மறுபக்கம்! அதனால்தான் ஆங்கிலத்தில் அவரைப்பற்றி குறிப்பிடும்பொழுது "Anna had the force of a tempest and the calm of the sea" என்று பெருமையோடு அழைத்தார்கள்

### வாழ்ந்து காட்டிய வழி

'அண்ணா' என்கிற அந்த மூன்றெழுத்து மந்திரத்தின் சக்தி உலகளாவி உள்ளது என்பதை இன்றும் எவரும் மறுக்க முடியாது. இந்த ஆழமான பற்றுதலுக்கும், அன்பிற்கும் பல காரணங்கள் உள்ளன. அண்ணா அவர்களின் செயல், பேச்சாற்றல், சகிப்புத் தன்மை, கொள்கைப் பிடிப்பு, பகுத்தறிவுப் பற்று, அறிவாற்றல், பொது நோக்கு, சகோதரத்துவம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், இவற்றிற்கு எல்லாம் மேலாக மனிதனை மனிதனாக மதித்து, எவர் மனதையும் தன் வாழ்நாளில் புண்படச் செய்யாத அவரது செயல், வாக்கு, இவைதான் அவரை உலகளவில் உயர்த்தியதோடு மட்டுமின்றி, அனைவரின் உள்ளத்திலும் இடம் பெறச் செய்தது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. 'நான் ஒரு சாமானியன், மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்' என்று அவர் சொல்லும்பொழுது, அவை வெறும் வாய் வார்த்தைகளாக இல்லாமல், உண்மையின் உருவாக அவரது உள்ளத்தில் இருந்து வெளியானவை என்பதற்கு அவர் வாழ்ந்து காட்டிய வழியே சான்றாகும்.

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-வது பிறந்த நாள் விழா 15.9.91 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழாத் தொடங்கியது.

செய்தி-சுற்றுலாத்துறை முதன்மைச் செயலர் திரு கே.ஜே.எம். ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

'வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும் பேசவல்ல சிறந்த சொற்பொழிவாளர் அவர். அண்ணா சிறந்த எழுத்தாளர், கட்டுரையாளர், நாடகாசிரியர், திரைப்பட வசன கர்த்தா அத்துடன் நாடு போற்றிய நாளிதழ், வார கிழமை இதழ்களின் ஆசிரியராக விளங்கினார்.

'காந்தியடிகள், காமராசர் போற்றிய எளிமையைக் கடைப்பிடித்தார் அண்ணா. சமூகச் சீர்திருத்தவாதியாகவும், ஆற்றல்மிக்க அரசியல்வாதியாகவும் விளங்கினார். இளைஞர்கள் அண்ணாவின் புத்தகங்களைப் படிக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் முன்னிலையுரையாற்றுகையில், 'திருக்குறளின் கருத்துக்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர் அறிஞர் அண்ணா. அண்ணாவின் வழித்தோன்றலாகப் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறார்' என்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். திருமதி, ராணி அண்ணா அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்குப் பரிசுகளும், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்களுக்கு அண்ணா விருதுகளும் வழங்கினார்.

மேலும், சென்னை மாவட்டத்தின் சார்பில், நலிந்த பிரிவினர்க்குச் சுமார் ரூ.14 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இத்திட்டங்களின் கீழ் மொத்தம் 355 பேர் பயன் அடைகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் தனி நபர் தொழில் முனைவோர் சிறப்புத் திட்டத்தின் கீழ், 8 பேருக்கு ஆட்டோ ரிக்ஷாக்களும், ஒருவருக்கு அம்பாசிடர் காரும் வழங்கப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்குச் சலவைப்பெட்டிகள், 8 பேருக்குத் தோல் தைக்கும் இயந்திரங்கள், 3 பேருக்குத் தையல் இயந்திரங்கள், 2 பேருக்கு இலவசக் கருவிகள் வழங்கப்பட்டன. ஆதி ஆந்திரர்கள் 5 பேருக்கு இலவச மனைப்பட்டாக்களும், முதல் அமைச்சர் பொது நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதி உதவிகள் இருவருக்கும், முதியோர் உதவித் தொகை 250 பேருக்கும், துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் 25 பேருக்கும், சாலை விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் 50 பேருக்கும், விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒருவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு க. கணேசன் இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

**- நமது செய்தியாளர்.**

## அண்ணாவின் பொன்மொழிகள்

அரசியலில் கருத்து மாறுபட்டவர்களை அவர் வாழ்த்திய துணிவும், கட்சித் தொண்டர்களிடம் குடும்பப் பாசத்தைப் புகுத்திய திறனும், எழுத்தாற்றலில் பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளை அறிமுகப்படுத்திய விதமும், கலைத் துறையை முழுமையாக அரசியலுக்குப் பயன்படுத்தி வெற்றி கண்ட தன்மையும் அண்ணா ஒருவருக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்' என்ற அவரது முழக்கம் என்றென்றும் அவர் வழி நடப்போர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்;
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு;
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்;
நடந்தவைகள் நடந்தவைகளாக
இருக்கட்டும்,
இனி நடப்பவைகள் நல்லதாக
இருக்கட்டும்.
மாற்றான் தோட்டத்து
மல்லிகைக்கும் மணம் உண்டு.
மறப்போம்! மன்னிப்போம்!

போன்ற அவரது பொன்மொழிகள் என்றென்றும் நிலையாகத் தமிழ் மொழியில் அழியா இடத்தைப் பெற்றுள்ளன. இதனை எவரும் பயன்படுத்தலாம். அதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவ்வாறு பயன்படுத்துவோர் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்ணாவின் மனநிலையில் தங்களை ஆழ்த்திக் கொண்டுதான் அவர்கள் இந்த வார்த்தைகளை உச்சரிக்கின்றார்களா? அல்லது வெறும் வார்த்தை ஜாலங்களுக்காகவா? நான் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அண்ணாவின் பெருமையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தயவு செய்து அண்ணாவின் பெயரை உச்சரிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாவின் பெருந்தன்மை அகில உலகப் பெயர் பெற்றது.

அண்ணாவின் சகிப்புத் தன்மை இமாலயப் பெருமை கொண்டது.

உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள வலுவான தொண்டர்களின் தலைவரான அண்ணா வன்முறை நாடாத வரலாற்று நாயகர். பல்வேறு இனத்தினர், மொழியினர் வாழும் மதச் சார்பற்ற மாபெரும் இந்தியத் துணைக் கண்டத்தில், தன்னை யார் என்று அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்திக் கொள்கிறபோது, 'நான் ஒரு திருநீறு அணியாத இந்து, சிலுவை அணியாத கிறித்துவன், கைலி கட்டாத முஸ்லீம்' என்று பெருமையோடு தன்னை அழைத்துக் கொண்டவர். 'பகுத்தறிவுப் பாதுகாவலர்' என்று பெருமையோடு அனைவராலும் அழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, பழமையின் பெருமைகளுக்கும் பிறரின் நம்பிக்கைகளுக்கும் வழங்க வேண்டிய மரியாதையை எந்த நேரத்திலும் வழங்கத் தவறியதில்லை.



'திராவிட நாட்டுக் கொள்கை'யை அவர் கைவிட்டதற்குக் கூறிய தெளிவான காரணங்கள் இன்றைக்கும் அவரை வணக்கத்திற்குரியவராக நம்மிடம் நிலைப்படுத்தியுள்ளது. இந்தியத் திருநாட்டின் எல்லைகளை அண்டை நாடான சீனா ஆக்கிரமித்தபொழுது அவர் சாதாரண மனிதனுக்கும் புரிகின்ற வகையில், 'தம்பி! வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும்' என்று கூறிய வார்த்தைகளின் ஆழம் அவர் இந்திய தேச ஒருமைப்பாட்டைக் காக்க விடுத்த ஒப்பற்ற அறிவுரையாகும்.

பாராளுமன்ற மக்களாட்சி முறையின் மூலம் ஆட்சியில் அமர்த்தப்பட்டு இருக்கிற மத்திய மற்றும் மாநில அரசின் கைகளை வலுப்படுத்துவதில் எங்கள் அரசு முன்னுரிமையோடு செயல்படும் என்பதையும், நமது தாய்த்திரு நாட்டைத் துண்டாடும் முயற்சியில் எவர் ஈடுபட்டாலும், அவர்களை அடையாளம் கண்டு அப்புறப்படுத்துவதில் எங்கள் அரசு முன்னணியில் இருக்கும், அதுவே அண்ணாவின் எண்ணமுமாகும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நல்ல அரசு என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கோடிட்டுக் காட்டினாரோ, அவற்றை எல்லாம் இந்த அரசு வழி வகுத்து முழுமையாகச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணா பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு அடித்தளமாக இருந்தது நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தான். அந்த இயக்கங்களின் பரிணாம வளர்ச்சியின் வாரிசாகத்தான் அவர் வளர்ந்து, சிறந்து இன்று நமது வணக்கத்திற்குரிய வரலாறாகத் திகழ்கிறார். அவர் வழி நின்று, அவரது வாரிசாகத்தான் நாங்கள் இன்று தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை மகத்தான மக்கள் ஆதரவோடு நடத்தி வருகிறோம். 'அண்ணா எங்களுக்கு மட்டும் சொந்தம்' என்பவர்களை மக்கள் மறந்து விட்டார்கள். 'அண்ணா மக்களுக்குச் சொந்தமானவர்' என்ற புரட்சித் தலைவரின் வழியொட்டி நடப்பவர்களான நாங்கள், அண்ணாவின் அடிச்சுவட்டில் ஆட்சிப் பொறுப்பை இன்று நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### உண்மையான அண்ணாவின் ஆட்சி அமைய...

தனது வாரிசுகளின் வளர்ச்சிக்காகச் சிலர் அண்ணா பெயரைச் சொல்லலாம். ஆனால், நாங்கள்

அவரை மக்களின் வளர்ச்சிக்காகத் தான் உச்சரிப்போம். அவர் பெயர் இழிவுபட எத்தணிக்கமாட்டோம். இன்றைய தமிழகத்தில் அண்ணாவின் அடிச்சுவடுகளைத் தொடராத வர்கள் ஆட்சி அரியாசனம் ஏறவே முடியாது. அதில் முதல் வெற்றி இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, இரண் டாவது வெற்றி உங்கள் சகோதரி யான எனக்கு; இனி என்றென்றும் உண்மையான அண்ணாவின் ஆட்சி அமையவே மக்கள் தொடர்ந்து தீர்ப்பளிப்பார்கள்.

**சட்டப்பேரவையில்...**

தமிழ்நாட்டில் மோட்டார் சைக்கிள் டாக் சியை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இந்த இரு சக்கர வாடகை வாகனங்களுக்குத் தனி வர்ணம் பூசப்படும். ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு ஒருவர் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு செல்லலாம். இந்த திட்டத்தின் மூலம் சுமார் 1 இலட்சத்திற்கும் மேலான இளைஞர் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். போக்கு வரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து இந்தத் திட்டம் கொண்டு வரப்படும் என்று தமிழகச் சட்டப்பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் (16.9.91) அறிவித்தார்.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் தனக்காக ரத்தம் சிந்திய தொண்டர்களின் மீது அபரி மிதமான பாசமும், நம்பிக்கையும் வைத்த தலைவர்கள். அவர்களது அந்தப் புனிதமான வழிகாட்டு தலைத்தான் நானும் பின்பற்றிக் கொண்டிருக்கிறேன். விரிந்து பரந்து இருக்கிற திராவிடப் பாரம்பரிய மான மாபெரும் ஆலமரத்தின் விழுது களாக இலட்சக்கணக்கில் பரவிக் கிடக்கிற உடன்பிறப்புக்களே! உங்கள் சகோதரியாகிய நான் உங்களுக்குச் சேவை செய்யவே நீங்கள் என்னை முதலமைச்சராக்கியுள்ளீர்கள் என்று தான் எண்ணுகிறேனே தவிர, உங்களை ஆளுகிற அதிகாரத்தை எனக்கு அளித்திருப்பதாக என்றென் றும் எண்ணமாட்டேன் என்பதை, நமது அண்ணா பிறந்த இந்த நன் னாளில் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவின் புகழ்மட்டும் பாடிச் செல்வதற்காக நாங்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட வில்லை என்பதை நான் நன்கு அறிவேன். அவர் உள்ளத்தால் விரும்பிய தமிழகத்தின் உயர்வை, தமிழ் மொழியின் உயர்வை அடைந்தே தீர்வதற்காகத்தான் நான் ஆட்சிப் பீடத்திற்கு ஏற்றப்பட்டுள்ளேன் என்பது எனக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை நன வாக்க, அவர் வழியில் நடந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாதையில் தொடர்ந்து இந்த அரசு பணியாற்றும் என்று உறுதி கூறுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர் களின் எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற என்னுடைய நீண்டநாள் அவா விரைவில் நிறைவேற உள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர் களின் எழுத்துச் செல்வங்களை எங்கள் அரசு நாட்டுடைமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த முயற்சியை நிறைவு செய்வ தற்காக அறிஞர் பெருமக்கள் அடங் கிய குழு ஒன்று விரைவில் அமைக் கப்பட உள்ளது. பேரறிஞர் அண்ணா வின் எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அவரது சிறு கதைகள், குறும் புதினங்கள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், மேடைச் சொற்பொழி வுகள் இவைகளை மலிவு விலையில் வெளியிட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட உள்ளது.

மேலும், பேரறிஞர் அண்ணா வின் ஒளிப்படங்கள் (Video Tapes) அறிஞர் அண்ணா வரைந்த ஓவி யங்கள் ஆகியவைகளைக் கால வரிசையில் தொகுத்து வெளியிடப் பட உள்ளது.

குறிப்பாக தனியாரிடமும், அர சிடமும், அகில இந்திய வானொலி நிலையத்திலுமுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களது சொற்பொழி வுகளைத் தாங்கிய ஒலி நாடாக்களை (Audio Tapes) வாங்கி அவற்றைத் தொகுத்து **'அண்ணா வாழ்கிறார்'** என்ற தலைப்பில் வெளியிட ஏற் பாடுகள் செய்யப்பட உள்ளது.

மேலும், அரசிடமும், தனியாரிட மும் உள்ள 16 எம்.எம்.திரைப் படங்களை வாங்கி ஒளிப்படங் களாக (Video Tapes) மாற்றி, பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றை 'அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் வெளியிடவும் உடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நன்றிக்கடன்

இந்த மாபெரும் விழாவில் நான் கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்ததிலும், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்களுக்கு அண்ணா விருதுகள் வழங்குவதிலும், அரசு நலத்திட்ட உதவிகளை ஏழை எளி யோர்களுக்குக் கொடுப்பதிலும், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசு களை வழங்குவதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு, மக்களின் விழிப்புணர்ச் சிக்கு வழிகோலிய அவரது எண் ணங்களுக்கு உருக்கொடுத்து, அவை களை நிறைவேற்றுகிற உறுதியுடன் நமது பயணத்தைத் தொடர்வோம்! நமது சந்ததியினர் பெருமையோடு தலைநிமிர்ந்து நடக்க தெளிந்த பாதையை நாம் அமைத்துக் கொடுப் போம்! அதுவே நாம் அண்ணா வுக்குச் செலுத்துகிற நன்றிக் கடனா கும் என்று கூறி அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - என்று சொல்லி விடை பெறுகிறேன். ●



# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - இம்மூன்றும் இணைந்திருந்தால் உயர்வுக்கு ஏது தட்டுப்பாடு?

## தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

**-15.9.91 அன்று நடைபெற்ற 'தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கு விழாவில் பேசியது.**

மக்களுக்குச் சேவை புரியும் மரியாதைக்குரிய சீருடை அலுவலர் களைச் சிறப்பிக்கும் இவ்விழாவில் நான் பங்கு கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-ஆம் பிறந்த நாளில் நான் முதலமைச்சரா கப் பொறுப்பேற்று 83-நாட்கள் பணிபுரிந்து, இன்று உங்களிடையே இந்நன்னாளில் உரையாற்றிக் கொண்டிருக்கின்றேன் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்கள் சேவை நாட்டிற்குத் தேவை என்பதில் எவருக்கும் மாறு பட்ட கருத்து இருக்க முடியாது. ஒரு ஆட்சி நிலையானதாக, வலுவான தாக நிலைத்திருக்கக் காவல்துறை யினரின் சீரிய பணி அத்தியாவசிய மானது. காவலர்கள் இல்லையேல் நாட்டில் கட்டுப்பாடு இருக்காது.

அண்ணா அவர்கள் அழகாகக் குறிப்பிட்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற' வாசகங்களுக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள் நீங்கள்! மக்களின் உயிரையும், உடைமையையும் காக்க வேண்டியது உங்கள் கடமை; இந்தக் கடமையை ஆற்றுவதில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியது கண்ணியம்; இவை இரண்டிற்கும் மேலாகக் கடமையைக் கண்ணியத்துடன் நீங்கள் ஆற்றும் பொழுது எதிர்வரும் ஆசாபாசங் களுக்கு அடிமையாகாது செயல் படுவது கட்டுப்பாடு. இம்மூன்றும் இணைந்திருந்தால் உங்கள் உயர் விற்கு ஏது தட்டுப்பாடு?

நான் சரித்திரப் பாடங்களில் படித்திருக்கின்றேன் - அந்நாளைய மன்னர்களுக்கு நால்வகைப் படைகள் உண்டு. அவை- ரத, கஜ, துரக, பதாதி என்று குறிப்பிடுவார்கள். இரதப்படை, யானைப்படை, குதிரைப்படை மற்றும் காலாட்படை. இந்த நான்கு வகைப் படைகளும் அன்றைய நாட்டைக் காக்க உரு வாக்கப்பட்டன. இன்றைய விழா வில் சிறப்பிக்கப்படும் காவல்துறை, சிறைத்துறை, தீ அணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படையினரை அன்றைய நால்வகைப் படையின ருக்கு ஒப்பிட்டு நோக்குகின்றேன். அக்காலப் படைவீரர்களின் துணை வியர்கள் தங்கள் கணவர் போருக் குப் புறப்பட்டால்தான் கலங்குவர். ஆனால் இன்று நமது நாட்டையும், மக்களையும் காக்கும் நீங்கள், நாள் தோறும் பணிக்குப் புறப்படும் பொழுதெல்லாம் உங்கள் இல்லத் தரசிகள் கலங்குகின்றனர் என்பதை நான் அறிவேன்.

சாதிக் கலவரம் என்றோ, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்றோ, சாராயத்தை ஒழிப்பதற்கென்றோ அல்லது தமிழ்ப் போராளிகளை அடக்குவதற்கென்றோ தங்கள் கணவர் புறப்பட்டுச் சென்றால், அவர் வீடு திரும்பும் வரை அவர் களுக்கு நிம்மதி இல்லை. அவர்களது உள்ளம் இன்று எவ்வாறு பதை

பதைக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கின்றேன்.

அரசுப் பணிகளில் வேறு எந்தப் பணியிலும் சிறிது குறைவோ, தொய்வோ விழுந்தால் அதனை வரும் காலத்தில் சரிக்கட்டிக் கொள்ளலாம். ஆனால், இன்று விழாவில் பாராட்டப்படுகின்ற காவல் துறையினருக்கோ கரணம் தப்பினால் மரணம்தான்.

நீங்கள் நாட்டிற்கும், மக்களுக்கும் ஆற்றும் பணி மிகமிக முக்கியமான பணி. ஆனால், முறையாகப் பாராட்டப்படாத பணி. காவல் துறை இல்லையேல், இன்று அரசு நிர்வாகத்தின் இயக்கமே இல்லை என்பது உலகறிந்த உண்மை. இருப்பினும் அவர்களது நியாயமான சிறு சிறு கோரிக்கைகளைக்கூட உரிய நேரத்தில் முறையாகப் பரிசீலனை செய்து, துரித முடிவுகள் எடுக்காத நிலை முன்னர் நிலவியது. ஆனால், நான் பொறுப்பேற்ற 15 நாட்களுக்குள்ளாகவே, காலஞ்சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு டி.ஆர். விஜயராகவாச்சாரி அவர்களின் துணைவியார் திருமதி கல்யாணி அவர்களுக்கு 50 ஆண்டுகளாகக் கிடைக்காத ஒய்வு ஊதியத்தை வழங்கி ஆணையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; அதை எண்ணி நான் ஆறுதல் அடைந்தேன். ஆபத்தான பணிகளை நித்தம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள உங்களது சிரமங்களை நான் நன்கு அறிவேன். கடமை ஆற்றும் எவரும் கைவிடப்பட மாட்டார்கள். பாராட்டப்படுவார்கள் என்று உறுதி கூறுகின்றேன்.

மிக முக்கிய அத்தியாவசியப் பணியில் உள்ள நீங்கள், நாள்தோறும் பலதரப்பட்ட மக்களைப் பல்வேறு சூழ்நிலைகளில், மனநிலைகளில் சந்திக்கின்றீர்கள். அவர்களது பிரச்சினைகளில் உதவுகிறீர்கள். மக்கள் உங்களை முழுமையாக நம்புகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு நன்கு தெரியும், அவர்களை உங்களால்தான் காக்க முடியும் என்று; இந்த நம்பிக்கையை நீங்கள் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வேண்டுகிறேன்.

தற்போது தமிழகத்தில் ஒரு மாபெரும் தார்மீகப் போரையே தொடங்கியுள்ளோம். அது, மது என்ற மாய அரக்கனைத் தமிழகத்தின் மண்ணை விட்டு அடியோடு அப்புறப்படுத்தும் புனிதப் போர். இந்தப் போரில் முன்னணிப்படை வீரர்களாக நிற்பவர்கள் நமது சிறப்பு மிக்க காவல்துறையினர். நாட்டின் நலன் காக்கவும், மக்களைப் பேரழிவிலிருந்து பாதுகாக்கவும் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புனிதப் போரில் நீங்கள் ஒவ்வொருவரும் கர்மவீரர்களாக முழுமனதோடு பங்கேற்றுச் செயல்பட்டு, இந்த அரசுக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தருவீர்கள் என்று நம்புகின்றேன். இதுவரை நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் கண்டு பூரிப்படைகின்றேன். இப்புனிதப் பணி தொடரட்டும்; தமிழக ஏழை எளிய மக்கள் முழுமையாக இத்தீமையிலிருந்து விலகட்டும். இப்பணியினை நிறைவேற்றுவதற்கு உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், வசதிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதி அளிக்கின்றேன்.



மாண்புமிகு முதல்வர் அவர்களால் 15.9.91 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தீயணைப்புத் துறைக்கான புதிய நீட்டிப்பு ஏணி (Morita Turn Table Ladder 46m)

இன்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையே கனத்த மனதுடன் நமது காவலர்கள் பணிபுரிகின்றார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களது வாழ்க்கையை வளமடையச் செய்து, அமைதியான மனதுடன் அவர்களது கடமைகளை ஆற்றக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவது, உள்துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் என்னுடைய கடமையாகும். நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை அரவணைத்துப் பாதுகாப்பது இந்த அரசின் கொள்கையுமாகும். அந்த அடிப்படையில், உங்களுக்கு என் இதயத்தில் ஓர் உயர்ந்த இடம் அளித்துள்ளேன். உங்களது உயர்விற்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டுள்ளேன். அவற்றை விரைவில் செயல்படுத்தவும் இருக்கின்றேன் என்று மட்டும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் நீண்ட நெடுநாட்களாகச் சில கோரிக்கைகளை அரசின்முன் வைத்துள்ளீர்கள் என்பதை நான் அறிவேன். குறிப்பாக, Risk allowance, Conveyance allowance, Uniform allowance மற்றும் Kit Maintenance allowance-களை உயர்த்தக் கோரியும் பயணப்படியின் உச்ச வரம்பை நீக்கக் கோரியும் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கேட்டுவருகின்றீர்கள்.

மேலும் உங்கள் குடும்பங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையில் குழு ஈட்டுறுதித் திட்டம் (Group Insurance Scheme) மற்றும் பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் நடைமுறையிலுள்ள குடும்ப ஒய்வு ஊதியச் சிறப்புத் திட்டத்தை (Special Family Benefit Pension) தமிழகத்திலும் செயல்படுத்தக்கோரியுள்ளீர்கள். தமிழ்நாடு காவல்துறை தற்போது ஆண்டுதோறும் அரசு

வழங்கும் நலத்திட்ட உதவியான ரூ.5 இலட்சத்தை உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றீர்கள். காவலர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தரவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இவை அனைத்தையும் நான் பரிவோடும், பாசத்துடனும் பரிசீலனை செய்துள்ளேன். இந்த நல்ல விழாவிலேயே உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறவகையில் பல அறிவிப்புகளை நான் தெரிவிக்க விரும்பினாலும் சட்டப்பேரவைத் தொடர்க் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், அவற்றை வெளியிட இயலாத நிலையில் இருக்கின்றேன். உங்கள் நலன் காக்க உங்களது நியாயமான கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றி வைக்கப்படும். என்னைப் பொறுத்தமட்டில் உங்களுடைய எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தாலும், மாநிலத்தின் தற்போதைய நிதிநிலை நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, என்னால் எவ்வளவு அதிக நன்மைகளை உங்களுக்கு வழங்க முடியுமோ, அதனை 23.9.1991 அன்று நான் கொண்டுவரும் காவல்துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையின் பொழுது அறிவிப்பேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்; சற்றே பொறுத்திருங்கள் விரைவில் நற்செய்தி உங்களுக்குக் கிடைக்கும்.

★ மதுவிலக்கை மகாத்மா காந்தியடிகள் ஒரு கொள்கையாக அல்ல, வாழ்க்கை முறையாகவே வலியுறுத்தினார். குடிகாரர்கள் தங்களை அழித்துக் கொள்வதுடன் தங்களைச் சார்ந்துள்ள மக்களையும் அழித்துவிடுகிறார்கள். சமுதாயத்தின் ஒழுக்கமும் சீரழிவுக்குள்ளாகிறது. மதுவிலக்கால் சமுதாயம் அடையும் நன்மைகள் தான், பிற எவற்றையும்விட முக்கியமானவை. உடல்நலமிக்க மக்களைக் கொண்ட நாடுதான் முன்னேற முடியும்.

-பேரறிஞர் அண்ணா




தமிழ்நாடு காவல்துறை அலுவலர்களுக்கும், தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், சிறைத்துறை அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையினருக்கும், அவர்கள் தங்களது உயிரினைத் துச்சமாக மதித்து உயரிய சாதனை படைத்த மக்கள் பாதுகாப்புப் பணியினைப் பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன. பதக்கங்கள் பெற்றுப் பாராட்டப்படும் சீருடை அலுவலர்களுக்கு என் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களைப் போல் வீர சாகசச் செயல் புரிந்த அலுவலர்கள் பலர் நிச்சயமாக இருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரையும் அழைத்து அணிவகுப்பு நடத்தி இந்நன்னாளில் சிறப்பிக்க இயலாத நிலையில்தான், அரசு அவர்களுள் ஒரு சிலரை மட்டும் அவர்களது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, இன்று விழாவிற்கு அழைத்துச் சிறப்பிக்கின்றது என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் பார்த்தால், இன்று தமிழகத்திலுள்ள சிறப்பிக்கப்படும் நான்கு துறை அலுவலர்கள் அனைவருமே பாராட்டுதலுக்குரியவர் ஆவர். அவர்கள் அனைவருக்கும் என் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக, அமைதிப் பூங்காவாக, ஒருமைப்பாட்டின் உறைவிடமாகத் திகழச் செய்யும் முயற்சியில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படுவோம் என்று உறுதிபூண்டு - அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்! •

# காவல்துறை விழா நிகழ்ச்சிகள்

'தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா', சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் 15.9.91 அன்று மாலை மிகச் சிறப்போடு நடைபெற்றது.

சிறந்த தொண்டாற்றிய காவல் துறை, சிறைத்துறை, தீ அணைப்புத் துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் 79 பேருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதக்கங்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

அன்று மாலை, 3.30 மணி முதலாகவே, விழா நடந்த நேரு விளையாட்டரங்கத்தின் நிகழ்ச்சிகள் குறித்த நேர்முக வருணனை ஒலி பரப்பப்பட்டது.

விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை மாநகராட்சிக் கட்டடத்தின் அருகிலிருந்து அரசு மரியாதையுடன்



குதிரைப்படை வீரர்கள் அணிவகுத்து ஊர்வலமாக அழைத்து வந்தார்கள்.

சரியாக 4 மணிக்கு நேரு விளையாட்டரங்கத்தினுள் வந்து சேர்ந்ததும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு சு. ஸ்ரீபால், இ.கா.ப., வரவேற்று அணிவகுப்பு மரியாதையேற்கும் மேடைக்கு அழைத்துச் சென்றார்.

அணிவகுப்புத் தலைவரின் அறிக்கை படிக்கப்பட்ட பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜீப் வண்டியில் ஏறி அணிவகுப்பைப் பார்வையிட்டார். அப்போது பார்வையாளர் பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த பொது மக்கள் எழுப்பிய வாழ்த்து முழக்கம் மண்ணதிரச் செய்தது. மலர்ந்த முகத்தோடு மக்களைப் பார்த்துக் கையசைத்தார் மாண்புமிகு முதல்வர்.

அதன்பின், மேடைக்கு வந்தடைந்த அவர் - ஆண் பெண் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

ஐந்து பிரிவுகளாக நடத்தப் பெற்ற அந்த அணிவகுப்புகளை முறையே - காவல்துறை உயர் அதிகாரிகளான செல்வி மங்கையர்க்கரசி, திரு ரங்கநாதன், திரு அகஸ்டின், திரு கலியமூர்த்தி, செல்வி புவனேஸ்வரி ஆகியோர் தலைமை தாங்கி நடத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு சு.ஸ்ரீபால் இ.கா.ப., வரவேற்புரையாற்றினார்.

அரசு உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., பாராட்டுரை வழங்கினார்.

அதன் பின் - காவல்துறை, சிறைத்துறை, தீ அணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் 79 பேருக்குச் சிறந்த தொண்டாற்றியமைக்காகப் பதக்கம் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து - பாண்டு வாத்தியப் பிரிவோடு, படையினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தி விடைபெற்றுச் சென்றார்கள். முடிவில், படை அணிவகுப்புத் தலைவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் பெற்ற வீரர்கள்.' வீராங்கனையுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களும் சேர்ந்து புகைப்படம் பிடித்துக் கொண்டார்கள்.

தமிழ்நாடு தீயணைப்புத்துறைக்குப் புதிதாக வாங்கப்பட்டுள்ள நீட்டிப்பு ஏணியைத் தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணிப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

தீயணைப்புத்துறையின் இந்த நீட்டிப்பு ஏணி, பல மாடிக் கட்டடங்கள் தீக்கிரையாகாமல் தவிர்ப்பதற்காக ரூ.2.84 கோடியில் புதிதாக வாங்கப்பட்டதாகும். இந்தியாவில்



வேறெந்த மாநிலத்திலும் இப்படியொரு ஏணி இல்லை. 150 அடி உயரம் வரை உயரக்கூடியதான இந்த நீட்டிப்பு ஏணியை எந்தத் திசையிலும் செலுத்த முடியும்.

இந்த நீட்டிப்பு ஏணியை இயக்கி, தீயணைப்புப்படை வீரர்கள் நிகழ்த்திக் காட்டிய செய்முறை விளக்கத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வியப்புடன் பார்த்து மகிழ்ந்தார்.

விழா நிறைவாகக் காவல்துறையின் மாபெரும் பேண்டு வாத்தியக் குழுவினர் இசை நிகழ்த்தினார்கள்.

'நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற...' - 'தாயில்லாமல் நானில்லை...' ஆகிய திரைப்படப் பாடல்களும், வரவேற்புப் பாடலான 'சுவாகதமும்', மெதுவான அணிவகுப்புக்குரிய 'நிலத்திலும் கடலிலும்' என்ற பாடலும், முதலமைச்சருக்குச் சமர்ப்பணமாக 'நியாயத்தைத் தந்தவர் நீர்...', 'ஐரிஸ் மெமோரிஸ்...', 'அபைட் வித் மி...' ஆகிய பாடல்களும் இசைக்கப்பட்டன.

பேரிகைகளின் எழுச்சியோடும், களிப்போடும் இந்த வண்ணமிகு விழா நிகழ்ச்சி நாட்டுப் பண்ணுடன் சரியாக 6.30 மணியளவில் நிறைவுற்றது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

# ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

**கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை விளக்கிக் கூறுகிறது இக்கட்டுரை.**

**ஊ**ரகச் சுகாதாரப் பணிகள் கி.பி.2000-க்குள் எல்லோருக்கும் நல்வாழ்வு என்ற இலக்கினை அடைந்திட 1,057 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்திட வேண்டும் என குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி, 30,000 கிராமப்புற மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என ஏற்படுத்தப்பட்டது. 31.3.91-இல் உள்ளபடி, தற்போது தமிழ்நாட்டில் 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 72 சமுதாய நல நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்களுடன் செயல்பட்டு வருகின்றன.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படும் விதம்**

கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள், கிராமப்புற மக்களுக்குச் சுகாதாரப் பணிகள் ஆற்றி வருகின்றன.

**நோய்த் தடுப்பு:** இவ்வகையில் தகுந்த நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பல திட்டங்களின் மூலம், மலேரியா மற்றும் பல கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**பொதுப்படையான முத்தடுப்பு ஊசித் திட்டம்:** இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறக் குழந்தைகளுக்குக் கக்குவான் மலேரியா, காசநோய்த் தடுப்பு மற்றும் பெரியம்மை நோய்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டு மேற்கண்ட நோய்களினால் கிராமப்புறக் குழந்தைகள் பாதிக்கப்படாவண்ணம் தடுக்கப்படுகிறது.

**சுகாதார முன்னேற்றம்:** இந்த வகையில் கிராமப்புற மக்களுக்குச் சுகாதாரம், சுற்றுப்புறத்தூய்மை, குடும்பநலம் போன்றவை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமாக அறிவுறுத்தப்படுகிறது.

**சிகிச்சை:** கிராமப்புற மக்களுக்கு ஏற்படும் சிறு நோய்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்தும் சில சிறிய அறுவைச் சிகிச்சைகளும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செய்யப்பட்டு வருகின்றன. சிக்கலான நோய்கள் மற்றும் மேம்பட்ட மருத்துவ வசதிகள் தேவைப்படும் நோய்களுக்கு அருகிலுள்ள சமுதாயநல நிலையத்திற்கோ அல்லது மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கோ தகுந்த சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்றன.

1989-90-ஆம் ஆண்டில், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உள் நோயாளிகள் 62,698; பேரும் வெளி நோயாளிகள் 1,61,47,486 பேரும் கிசிச்சை பெற்றனர்.



**படுக்கை வசதிகள்:** இந்தச் சுகாதார நிலையங்களிலும் சமுதாய நல நிலையங்களிலும் மொத்தம் 5,208 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன.

**மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதாரநிலையங்கள் சமுதாய நல நிலையங்கள் செயல்படும் விதம்**

மொத்தம் உள்ள 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்களில், 72 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அல்லது சமுதாய நல நிலையங்கள் இவற்றில் 30 நிலையங்களில் கூடுதலாக 24 படுக்கை வசதிகள் மற்றும் அறுவை மருத்துவ அரங்கம், ஊடுகதிர்ப் பிரிவு, கூடுதல் உபகரணங்கள், ஆய்வக வசதிகளுடன் கிராமப்புற மக்களுக்குச் சிறப்புச் சிகிச்சை அளித்திடும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நான்கு, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஒரு சிறப்புச் சிகிச்சை அளித்திடும் மையமாகச் செயல்பட்டு வருகின்றன.

30 மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உள்ள உதவி சர்ஜன் பதவிகள் மேற்பட்ட படிப்புடன் சிவில் சர்ஜன் பதவிகளாக உயர்த்தப்பட்டு இந்தச் சிவில் சர்ஜன் பதவிகள் அனைத்தும் நிரப்பப்பட்டு உள்ளன.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு சமுதாய நல நிலையம் அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த வகையில் தன்னிறைவை அடைந்திட 384 சமுதாய நல நிலையங்கள் வட்டம் அல்லாத மருத்துவமனைகளை மாற்றியோ அல்லது தற்போது உள்ள ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்தியோ ஏற்படுத்தப்படும். 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் 78 சமுதாய நல நிலையங்கள் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.



நல்ல பேச்சு, இனிய பாட்டு உடல் வலுவுக்கேற்ற இனிய விளையாட்டு முதலியவற்றிலே ஆசை கொள்ளுங்கள். மனதிலே உறுதி, உற்சாகம் ஆகிய குணங்களை உற்பத்தி செய்து கொள்ளுங்கள்.

—பாரதியார்.

★ எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

★ ஏழைகளின் பசிதவிர்த்தலாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல். —வடலூரார்

**பழங்குடியினர் நலத்துணைத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 9 ஒன்றியப் பகுதிகள் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்பே இவ்வொன்றியப் பகுதிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வந்துள்ளது. அவைகளில் ஒன்று ஆலங்காயம் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக்கப்பட்டுள்ளது. டேனிடா திட்டத்தின் கீழ் தென் ஆர்க்காடு மாவட்டம் கல்வராயன் மலையில் உள்ள கரியாலூர் கிராமத்தில் ஒரு சமுதாய நல நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

பழைய பிரதான ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 9, பழங்குடியினர் நலத்துணைத் திட்டத்தின் கீழ் செயல்படுவது 14, சிதறி வாழும் பழங்குடி மக்களுக்காக 1, டேனிடா திட்டத்தின் கீழ் கரியாலூரில் ஏற்படுத்தப்பட்ட சமுதாய நல நிலையம் 1 ஆக மொத்தம் 25 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**கண்பார்வை குறைவுத் தடுப்புத் திட்டம்**

தேசியக் கண்பார்வை, குறைவுத் தடுப்புத் திட்டம், சாதாரண கண் நோய்களுக்குச் சிகிச்சை அளித்திடவும், கண்ணாடி வழங்கவும், பள்ளிக் குழந்தைகளுக்குக் கண் பாதுகாப்பு முறைகளை விளக்கவும் தேர்வு செய்யப்பட்ட 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம், 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் ஒரு கண் சிகிச்சை உதவியாளர் பணியில் அமர்த்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு 100 சதவிகிதம் மத்திய அரசு உதவி பெறும் திட்டமாகும். இதற்காக மத்திய அரசு ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் ரூ.3,000 மதிப்புள்ள உபகரணங்களை வழங்குகின்றது. மாநில அரசு ரூ.2,000 மதிப்புள்ள உபகரணங்களை வழங்குகின்றது. இந்தத் தேர்வு செய்யப்பட்ட 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், ஒரு கண் சிகிச்சை உதவியாளர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இந்தத் தேர்வு செய்யப்பட்ட 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் கண் சிகிச்சை உதவியாளரும், பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலரும் சாதாரண கண் நோய்களுக்குச் சிகிச்சை அளித்து, கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிக்

## சட்டப் பேரவையில்...

★ தமிழகத்தில் மதக் கலவரங்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமுடியாது; இத்தகைய மதக் கலவரங்களும் வன்முறைச் சம்பவங்களும் நடைபெறாமல் இருக்கத் தமிழக அரசு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கும். தமிழகத்தில் மதக் கலவரங்களைத் தூண்டுபவர்கள் மீதும் அவற்றில் ஈடுபடுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் (6.9.91) தெரிவித்தார்.

★ நடப்பு ஆண்டில், தமிழகத்தில் 76 இடங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருத்துவமையங்களில் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக மருந்துகள் வாங்க ஒதுக்கப்படும் தொகை தலா முப்பதாயிரம் ரூபாயிலிருந்து நாற்பதாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எஸ்.முத்துசாமி அவர்கள் சட்டமன்றத்தில் (8.9.91) அறிவித்தார்.

★ காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் விரைவில் துவக்கப்பட உள்ளது. 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்று பெயரிடப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சட்டப் பேரவையில் (14.9.91) அறிவித்தார்.

★ காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாகப் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் தீர்வு காண முடியாத அளவுக்குக் கர்நாடகம் இந்தப் பிரச்னையைக் கொண்டு சென்று விட்டது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழகம் மிகவும் பாதிக்கப்படும் வகையில் அவசரச் சட்டம் ஒன்றையும் கர்நாடகம் பிறப்பித்துவிட்டது. எனவே, கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடருவதால் எந்தவிதப் பயனும் ஏற்படாது என்ற வகையில், நடுவர் மன்றத்தின் முலம்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்ற கருத்தைத் தமிழ்நாடு கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப் பேரவையில் (6.9.91) தெரிவித்தார்.

---

கும் குறிப்பு எழுதித் தருகின்றனர். இது தவிர, கண்புரை நோய்கள் மற்றும் சிக்கலான நோய்களும் பரிசோதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்காக அருகில் உள்ள தலைமை மருத்துவமனை அல்லது நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்படுகிறார்.

இது தவிர, பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு வைட்டமின் 'ஏ' மருந்தும் கொடுக்கப்படுகிறது.

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப் படாவிட்டாலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான வசதிகள் செய்ய தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தூனேரி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி குழாய் வசதியுடன் நிர் மாணித்திட ரூ.1.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பந்தலூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒரு மருத்துவ அலுவலர் குடியிருப்பு, ஒரு செவிலியர் குடியிருப்பு கட்ட ரூ.2.70 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் ஊர்தியும் வழங்கப்பட்டுள்ளது.

### மருந்து வகைகள்

மருந்து வகைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் தேவையான மருந்து வகைகள் ஆண்டிற்கு ரூ.30,000 மதிப்புள்ளது. இது, 1.4.90 முதல் விநியோகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு சமுதாய நல நிலையத்திற்கும் ஆண்டிற்கு ரூ.75,000 மதிப்புள்ள தேவையான மருந்து வகைகள் 1.4.90 முதல் விநியோகம் செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் செயலாற்றுகின்ற மொத்தம் உள்ள 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 719 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே மருந்தகக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டு உள்ளது. மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு 303 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே உள்ளது. மீதம் உள்ள 710 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். மீதம் உள்ள 1,126 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.

மொத்தம் உள்ள 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 496 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மட்டுமே ஊர்திகள் உள்ளன. இவைகளில் 37 ஊர்திகள் உபயோகிக்க தகுதியற்றவைகளாகக் கருதப்பட்டு புதிதாக மாற்றப்பட உள்ளன. •





தந்தை பெரியார் அவர்களின் 113-வது பிறந்த நாளான 17.9.91 அன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முக்கியப் பிரமுகர்களும் சென்னையில் அண்ணா மேம் பாலம் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-வது பிறந்த நாளான 15.9.91 அன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சென்னை-அண்ணாசாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித் தார்கள்.







# காந்தி வழி

நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம் பிள்ளை





சாந்தவழி சத்தியத்தில் சலித்தாய் நெஞ்சே!
சன்மார்க்கப் பழக்கமிலாச் சகவா சத்தால்
காந்திவழி பழசாகப் போன தென்று
கதிமாற மதிமாறிக் கருது கின்றாய்;
மாந்தருக்குள் காந்தியைப்போல் புதுமை வாழ்க்கை
மற்றொருவர் நடத்தினரா? மனமே, சொல்வாய்!
ஆய்ந்தறிந்த அவன்தொடர்பை இகழ்வா யானால்
யாரும்இனி மீட்கவொண்ணாஅடிமை யேநீ!

பெற்றெடுத்த தாய்மிகவும் பழசாய்ப் போனாள்
பிறிதொருதாய் வேண்டுமென்று பேசு வார்போல்,
நற்றவத்தால் நமக்கடுத்த தலைவன் காந்தி
நானிலத்தின் உயிர்க்கெல்லாம் தாயாம் நண்பன்
கற்றகதை சரித்திரங்கள் காணாச் சுத்தன்
கருணையென்ப தின்னதெனக் காட்டும் தீரன்
உற்றதுணை காந்திவழி பழசா மென்றால்
உய்வதற்கு வேறுகதி உண்டோ? நெஞ்சே!

நித்தம்ஒரு காற்றினையே மூச்சு வாங்கி
நீர்நெருப்பு நிலம்வானில் புதுசு மின்றி
மெத்தவும்நாம் சலித்துவிட்டோம் என்பா யானால்
மேதினியில் வேறுவழி உண்டோ நெஞ்சே!
சத்தியஞ்சேர் சாந்தவழி அதையே நித்தம்
சாதிப்பான் காந்திஎன்று சலிப்பா யானால்
பத்தியத்தைப் பாதியிலே முறித்தாற் போலப்
பாடுபட்டும் பயனடையாப் பதரே யாவாய்!

அச்சமிக்க இருட்டறையில் அடைபட் டாங்கே
அழுவதற்கும் ஜீவனற்றுக் கிடந்த உன்னை
மிச்சமுள்ள மூச்சுமற்றுப் போகு முன்னால்
மீட்டணைத்து மேனிசெய்து விட்டான் காந்தி
இச்சகத்தில் அறிவறிந்தோர் என்றும் வாழ்த்தி
இன்பமிகும் காந்திவழி பழசா மென்றால்
பச்சையிளங் காய்புதிய தென்று கொண்டு
பழுத்தபழம் பழசென்னும் பான்மை யாகும்!



உலக வங்கி நிதியுதவியுடன்...

# குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்

'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவர் வாக்கு. சிறிய வாக்கியம் ஆயினும் சீரிய கருத்து. ஆழிசூழ் ஞாலமென்று போற்றப் படும் உலகில் 97 சதவிகிதம் நீர் கடல் நீராகவும் மீதி 3 சதவிகிதமே உட்கொள்ள உகந்ததாகவும் அமைந் துள்ளது. இதிலும் ஒரு சதவிகிதம் தான் நிலமட்ட நீராகவும், நிலத்தடி நீராகவும் சிதறிக் கிடக்கிறது.

தமிழ்நாட்டில் கிடைக்கும் நில மட்ட நீரின் அளவு மிகவும் குறைவு. ஆயினும் நிலத்தடி நீர்வளம் இன் றைய சூழ்நிலைக்கு ஓரளவு போது மானதாக இருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்கள் பெரும் பாலும் நிலத்தடி நீரையே நம்பி உள்ளன.

## மூன்று மண்டலங்கள்

தமிழ்நாட்டில் சென்னை மாநக ரைத் தவிர மற்ற அனைத்து உள் ளாட்சிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணி யைத், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது. அனைத் துக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப் பட்ட சுத்தமான குடிநீர் வழங்கும் பொருட்டு மாநிலம் வடக்கு, மேற்கு, தெற்கு என மூன்று மண்டலங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தெற்கு மண்டலம் மதுரை, அண்ணா, பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர், இராமநாதபுரம், திருநெல் வேலி கட்டபொம்மன், வ.உ.சி. மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களைக் கொண்டதாகும். இவற்றில் குறிப்பாக இராமநாதபுரம், மதுரை, அண்ணா மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தின் குடிநீர் திட்டப் பணிகளை நேரில் கண்டறியும் பொருட்டு சென்னையிலிருந்து பத்திரிகையாளர் குழு ஒன்று அண்மையில் இந்த மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்தது.

## தென் மண்டலம்

தென் மண்டலத்திலுள்ள மொத் தம் 34 நகராட்சிகளில் 33 நகராட்சி களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு நகராட்சியான பத்மநாபபுரம் நகராட் சிக்கு (கன்னியாகுமரி மாவட்டம்) ரூ.231.10 இலட்சம் செலவில் குடி நீர் வழங்கும் பணி தற்சமயம் நடை பெற்று வருகிறது.

1.4.1990 தேதியன்று உள்ள படி, தென் மண்டலத்தின் மொத் தம் 8 மாவட்டங்களிலும் உள்ள 16,741 குடியிருப்புகளில் 5,797 குடியிருப்புகளுக்கு முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பட்டுள்ளன. 10,710 குடியிருப்பு களுக்கு ஓரளவு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளன. 234 குடியிருப்பு

களுக்கு இன்னும் சுத்தமான குடிநீர் வழங்கப்படவில்லை. இதில் 185 குடியிருப்புகளுக்குத் தற்சமயம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 49 குடியிருப்புகளுக்கு இவ்வாண்டு இறுதிக்குள் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.17.81 கோடி செலவில் 2,114 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை ரூ.356.13 இலட்சம் செலவில் 265 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளன.

## தொழில் நுட்ப மையம் (Technology Mission)

கிராமப்புறங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட சுத்தமான குடிநீர் வழங்கவும், கிராமக் குடிநீர்த் திட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டும் கிடைக்கும் அனைத்துத் தொழில் நுட்பங்களையும் ஒன்று சேர்த்து 'தொழில் நுட்ப மையம்' என்ற ஒரு புதிய அமைப்பினை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த மையத்தின் முக்கிய நோக்கமே குடிநீர்ப் பிரச்சினையுள்ள கிராமங்களைக் கண்டறிந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதாகும்.

## இராமநாதபுர மாவட்டத்தில் தொழில் நுட்ப மையத்தின் பணிகள்

இந்தியாவில் வறட்சிக்கு இலக்காகும் கடலோர மாவட்டங்களில் இராமநாதபுர மாவட்டமும் ஒன்றாகும். இந்த மாவட்டத்தின் தற்போதைய மக்கள் தொகை 11,35,887. இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை 14,48,605 ஆக உயருமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் அதிக அளவில் இருந்தாலும் அந்த நீரில் உப்புத் தன்மை அதிகமாக இருப்பதால் இந்த நீர் குடிப்பதற்குப் பயன்படுவதில்லை. இந்த மாவட்டத்தில் வைகை ஆறு ஓடினாலும் மழைக்காலத்தில் வெள்ளம் ஏற்பட்டால் தான் இதில் தண்ணீர் வரும். மற்ற காலங்களில் இந்த ஆறு வறண்டு காணப்படும்.

## உவர் நீரைக் குடிநீராக்கும் திட்டம்

இந்தத் திட்டத்தில் உவர் நீரிலிருந்து உப்பு தனியாக நீக்கப்பட்டு உவர் நீர் குடிநீராக மாற்றப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 இடங்களில் ரூ.167 இலட்சம் செலவில் தொழில்நுட்ப மையத்தின் உதவியுடன் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தென் மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு எம். நடராசன் அவர்கள் இராமநாதபுரத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் மூலம் 21 குடியிருப்புகள் முழுமையாகவும் 19 குடியிருப்புகள் ஓரளவும் பயனடையும்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் 11 இடங்களில் நல்லிருக்கை, ஏனாதி, வன்னியக்குடி, குண்டுகுளம், கரிசல்புளி ஆகிய 5 இடங்களில் இந்தத் திட்டம் ஏற்கெனவே பூர்த்தியடைந்து அதன் மூலம் 14 குடியிருப்புகளுக்குச் சுவையான குடிநீர் வழங்கப்படுகிறது. சிக்கல், சீரண்டை, மேலசிறுபோது, கருமல், பூசேரி ஆகிய 5 இடங்களில் இந்தத் திட்டம் தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளன. வாலிநோக்கம் என்ற இடத்தில் உவர் நீரைக் குடிநீராக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

வைகை அணையிலிருந்து மதுரை மாநகருக்குக் குடிநீர் கொண்டுவர 1,100 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் அமைக்கும் பணி.



தொழில்நுட்ப மையத்தின் உதவியுடன் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.465.199 இலட்சம் செலவில் 496 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாகவும், இவற்றில் 334 குடியிருப்புகளுக்கு ரூ.355 இலட்சம் செலவில் இதுவரை குடிநீர் வழங்கப்பட்டிருப்பதாகவும் பரமக்குடியில் நடந்த மக்கள் விழிப்புணர்ச்சி முகாமில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தென் மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு எம். நடராசன் தெரிவித்தார்.

உவர் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தில் ஒரு லிட்டர் உவர் நீரைக் குடிநீராக மாற்ற சுமார் 8 முதல் 10 காசுகள் வரை செலவாகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 22 ஆயிரம் மக்கள் பயனடைவர்.

குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகளுக்கு மழை நீரைத் தேக்கி வைத்து ஊரணிகள் மூலம் குடிநீர் வழங்கும் முறை இராமநாதபுரம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, 28 குடியிருப்புகள் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 4 குடியிருப்புகளுக்கு ஊரணி மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

## உலக வங்கி உதவியுடன் மதுரை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

மதுரை மாநகராட்சியின் குடிநீர்ப்பிரச்சினையைச் சமாளிக்க வைகை அணையிலிருந்து குழாய் மூலமாக மதுரைக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணி விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வரும் இந்தத் துணைத் திட்டம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்தத் திட்டத்துக்கான தலைமைப் பொறியாளர் திரு எம்.என். ஹூசேன் மதுரை சென்ற நிருபர்களிடம் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.35.76 கோடி.

மதுரை மாநகராட்சியின் தற்போதைய மக்கட்தொகை சுமார் 10 இலட்சம். இன்னும் 20 ஆண்டுகளில் இது 17 இலட்சங்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் தேவைப்படும் குடிநீரின் அளவு 90 மில்லியன் லிட்டர். 20 ஆண்டுகளுக்குப் பிறகு (2011-இல்) இந்த மாநகரின் குடிநீர்த்தேவை 185 மில்லியன் லிட்டராக இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது மதுரைக்குத் தினமும் 68 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. வைகை அணையிலிருந்து 1,500 மில்லியன் கனஅடி தண்ணீர் எடுப்பதற்கு அரசு உத்தரவு பெறப்பட்டுள்ளது.



இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர்நீரைக் குடிநீராக மாற்றும் கருவி.

## 65 கி.மீ. தூரத்திற்குக் குழாய் மூலம் தண்ணீர்

இத்திட்டத்தின்படி மதுரை நகரிலிருந்து சுமார் 65 கி.மீ. தூரத்திலுள்ள வைகை அணையின் பக்கத்திலுள்ள மதகு அணையிலிருந்து தேவைக்குரிய தண்ணீர் 1,100 மி.மீ. விட்டமுள்ள குழாய் மூலம் பண்ணைப்பட்டிக் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இங்கு சுத்திகரிக்கப்பட்டு, பின்னர் மதுரைக்குக் குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. மதுரைக்குக் கொண்டு வரப்பட்ட நீர் புதிதாகக் கட்டப்பட்டுவரும் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மற்றும் தற்போதுள்ள 8 நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பல இடங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வைகை அணையிலிருந்து குழாய்கள் மூலம் கொண்டு வரப்படும் நீர் மதுரை நகரில் பல்வேறு இடங்களில் கட்டப்படும் 13 மேல்நிலை நீர்த்



திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்க சித்தர்கள் நத்தம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள உறிஞ்சுக் கிணறுகள்.

தேக்கத் தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டு பின்னர் 133 கி.மீ. பகிர்மானக் குழாய்கள் மூலம் நகரின் பல்வேறு இடங்களுக்கு விநியோகிக்கப்படும்.

கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் 4 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## தற்போதைய நிலை

மொத்த தூரத்தில் சுமார் 912 மீட்டர் தூரத்திற்குச் சுத்திகரிக்கப்படாத தண்ணீரும், சுமார் 19 கி.மீ. தூரத்திற்குச் சுத்திகரிக்கப்பட்ட நீரும் கொண்டு செல்லக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 133 கி.மீ. பகிர்மானக் குழாய்களில் 81 கி.மீ. தூரத்திற்கு வேலைகள் முடிவடைந்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில் இதுவரை ரூ.17.32 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

## நடமாடும் சோதனைக்கூடம்

மதுரை நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரைப் பரிசோதிக்க அனைத்து வசதிகளுடன் கூடிய சோதனைக் கூடம் ஒன்று ஒரு வேனில் அமைக்கப்பட்டுள்ளது. நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ள இடங்களுக்கு இந்த வேன் மூலம் நிபுணர்கள் சென்று குடிநீரைப் பரிசோதனை செய்வார்கள்.

## குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள்

மதுரை மாவட்டம் தேனி அல்லி நகரம் நகராட்சிக்குக் குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு, நபர் ஒருவருக்கு ரூ.200 முதல் 300 மட்டுமே. இந்தத் திட்டம் குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான செலவு ரூ.71.28 இலட்சம். ஒரு கழிவிடம் கட்டுவதற்கு ஆகும் செலவு சுமார் ரூ.1,800. தேனியில் மட்டும் இதுவரை இத்தகைய கழிவறைகள் 2,615 கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## திண்டுக்கல் குடிநீர்த்திட்டம்

திண்டுக்கல் நகராட்சிக்கு காமராசர் சாகர் அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் முதன் முதலில் 1962-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் தற்சமயம் 10 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்படுகிறது. திண்டுக்கல் நகராட்சியின் தற்போதைய மக்கட் தொகை 1,89,700. இந்த நகரின் மக்கட் தொகையும், குடிநீர்த் தேவையும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருப்பதால், திண்டுக்கல் நகருக்குக் கூடுதலாகக் குடிநீர் வழங்கும் பொருட்டு வைகை ஆற்றின் தரைமட்டத்திலிருந்து தண்ணீர் எடுத்து விநியோகம் செய்ய ஒரு கூடுதல் திட்டம் 1986-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.8.97 கோடி. இந்தத் திட்டம் 1989-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

## பிற நகரங்கள்

இந்தத் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் நகரிலிருந்து சுமார் 42 கி.மீ. தூரத்திலிருக்கும் சித்தர்கள் நத்தம் என்ற இடத்தில் வைகை ஆற்றின் தரைமட்டத்தில் 6 நீர் உறிஞ்சுக் கிணறுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த 6 கிணறுகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் அருகாமையிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து 500 மி.மீ. குழாய்கள் மூலம் திண்டுக்கல் நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்தப் புதிய திட்டத்தின் மூலம் திண்டுக்கல் நகராட்சி தவிர வழியில் 18 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் மதுரை தவிர கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், 75 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டமும், மேலும் 14 நகராட்சிகளில் குறைந்த செலவில் துப்புரவுத் திட்டமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்கள் மூலம் ஊரகம் மற்றும் நகரப் பகுதிகளைச் சார்ந்த சுமார் 39 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

- ஜே. சந்திரன்.

நீலகிரி மாவட்ட த்தில்

# வளர்ச்சிப் பணிகள்

**நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளர்ச்சிப் பணிகள் குறித்தும், மாவட்டத் தொழில் மைய வளர்ச்சிப் பணிகள் குறித்தும் விளக்குகிறது இக்கட்டுரை.**

நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 13,200 லிட்டர் மட்டுமே கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து வந்தது. இப்பொழுது இந்த நிலை மாறி தற்பொழுது நாளொன்றுக்குச் சுமார் 32,000 லிட்டர் பால் இவ் வொன்றியம் பெற்று வருகிறது. இதில் உள்ளூர் விற்பனை அளவான 26,000 லிட்டர் போக மீதி பால், வெளி மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இந்தியாவின் மிகப்பெரிய திட்டமான ஒருமுகப்படுத்தப்பட்ட நசியம் என்னும் திட்டத்தை இவ்வொன்றியம் நிறைவேற்றியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியின் பருவகால வித்தியாசத்தைச் சமநிலைக்குக் கொண்டுவர முடியும். ஒருமுகப்படுத்தப்பட்ட கன்று பிறப்புகள் உண்டாகும்.

பால் உற்பத்தித்தியாளர்கள் சங்கங்களின் மூலம் உள்ளூர் விற்பனை அளவு அதிக அளவில் இருந்து வந்ததைக் குறைத்ததன் மூலம் ஒன்றியம் பெறும் பாலின் அளவு கணிசமான அளவு உயர்த்தப்பட ஏதுவாகியது. இந்த முறையின் மூலம் பால் சுறக்காத மாடுகளுக்குச் செயற்கை முறையில் பால் சுரக்கப்பட்டு கன்று ஈனாமலேயே பால் பெறும் சோதனை வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. இதனால் பால் உற்பத்தியைக் கணிசமான அளவு உயர்த்த முடியும்.

இம்மாவட்டத்தில் புதிதாக 250 நுண்ணிய பால் பண்ணைகள் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வொன்றியம் தயாரிக்கும் உபபொருட்களை விற்பனை செய்ய புதிதாக மூன்று விற்பனைப் பிரிவுகள் வெலிங்டனிலுள்ள சங்கம் காம்ப்ளக்ஸ், கூர்கா ஹில்ஸ், எம்.ஆர்.சி. ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது.

பொக்காபுரத்திலுள்ள இவ்வொன்றியத்திற்குச் சொந்தமான நிலத்தில் தோடா எருமைப்பண்ணை அமைக்கும் திட்டம் மிக விரைவாகத் துவக்கப்பட்டு இன்னும் இரண்டு வாரங்களுக்கு இப்பண்ணை செயல்படத் துவங்கவுள்ளது.

கூட்டுறவுக் கல்வித் திட்டத்தின் மூலம், பால் உற்பத்தியாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒரு சுமுகமான இணக்கத்தை ஏற்படுத்தி நிர்வாகத்தில் அவர்களுக்கு இருக்கும் பங்கினை எடுத்துக் கூறுவதே ஆகும்.

பாலாடைக்கட்டி தயாரிக்கும் பொழுது மீதம் ஏற்படும் பால் கலந்த நீரிலிருந்து 'மிலி' என்று பெயரிடப்பட்டுள்ள பானமும், நெய்யிலிருந்து மீதமாகும் பொருளிலிருந்து இனிப்பும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பொக்காபுரத்திலுள்ள இவ்வொன்றியத்திற்குச் சொந்தமான 120 ஏக்கர் பரப்பளவுள்ள புல் பண்ணையில் மாட்டுத் தீவனப் பயிர்கள் பயிரிடப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கும் வேறு நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.



மலைப்பகுதியான நீலகிரி மாவட்டத்தில், இவ்வொன்றியத்தின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மாவட்டத் தொழில் மையம்

சிறு தொழில் வளர்ச்சிக்குத் தொழில்முனைவோரைக் கண்டறிந்து அவர்களுக்குத் திட்ட குறிப்புகளைக் கொடுத்தல், உரிமம் பெறல், இயந்திர ஏற்பாடு, நிதி வசதி, மூலப் பொருள் வசதி போன்றவைகளை மாவட்டத் தொழில் மையம் ஏற்படுத்திக்கொடுக்கின்றது. படித்து வேலை



யற்றோருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்ட வகையில் மனுதாரரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் கடன் மனுக்கள் பெற்று வங்கிகள் மூலம் கடன் வசதி செய்வதுடன் தொழில் துவங்கப்படத் தேவையான தொடர் நடவடிக்கையை நீலகிரி மாவட்டத் தொழில் மையம் மேற்கொள்கிறது. சிறு தொழில்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள், மாவட்ட ஆலோசனைக்குழு மற்றும் ஒரு முனைத் தீர்வுக் குழுவின் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன.

தொழில் முனைவோரைக் கண்டறிந்து தற்காலிகச் சான்றிதழ் வழங்க மாநிலக் குறியீடு 400 ஆக நீலகிரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டது. 31.7.91 முடிய 129 தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய சிறு தொழில்களுக்கான நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்க மாநிலக் குறியீடு 200 ஆக நீலகிரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.7.91 முடிய 68 நிரந்தரச் சிறு தொழில் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

1991-92-ஆம் ஆண்டிற்குக் கைத்திறன் தொழில்கள் பதிவு செய்வதற்கான குறியீடு 160 ஆகும். 31.7.91 முடிய 39 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்ட குறியீடு 31.3.92-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

1991-92-ஆம் ஆண்டிற்கான குடிசைத் தொழில் பதிவு செய்வதற்கான குறியீடு 160 ஆகும். 31.7.91 முடிய 37 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்ட குறியீடு 31.3.92-க்குள் அடையப்பட்டுவிடும்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 1983-84-ஆம் ஆண்டிலிருந்து 25 சதவிகிதம் மானியத்துடன் படித்து வேலையற்ற இளைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர். நடப்பு நிதி ஆண்டில் (1991-92) இம்மாவட்டத்தில் 250 பேர்கள் பயன்பெற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

31.7.91 முடிய இத்திட்டத்தின் மூலம் 2,117 நபர்களுக்கு 356.15 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள தொகையில் அவர்களுக்கு 25 சதவிகிதம் மானியத் தொகையாக ரூ.88.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு (1991-92) 250 நபர்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 69 விண்ணப்பங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தொழில் முனைவோருக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் 31 இளைஞர்களுக்கு 28.1.91-லிருந்து ஆறு வாரக்காலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்கள் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் மேலும், எழுபத்தைந்து சதவீதத்தினர் கட்டுமானம் மற்றும் மின்சாரம் மற்றும் மின்னணு டிப்ளோமா பெற்றவர்களாகவும் உள்ளனர். இப்பயிற்சியின் மூலம் திறமைவாய்ந்த தொழில் முனைவோர்கள் மாவட்டத் தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் புதிய தொழில் தொடங்கிப் பயன்பெற வாய்ப்புண்டு. •

## தமிழ்நாடு மதுவிலக்கு மாநிலப் பிரச்சாரக் குழு

**மதுவின் தீமைகளைப் பற்றியும், போதை மருந்துகளின் கெடுதல்கள் மற்றும் மதுவிலக்கின் நன்மைகள் குறித்தும் மக்களிடம் எடுத்துக் கூறி பிரச்சாரம் செய்வதற்காக, தமிழ்நாடு மதுவிலக்குப் பிரச்சாரக் குழு மாநில அளவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் மொத்தம் 23 பேர் உள்ளனர்.**

**சட்டமன்ற உறுப்பினர்கள் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியன், திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள், திரு இராம. ராமநாதன், திருமதி கவிநிலவு தர்மராஜன், திரு செ.கு.தமிழரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு தா.பாண்டியன், தவத்திரு சுந்தர சுவாமிகள், தொழிலதிபர் திரு என். மகாலிங்கம், ஆற்காடு இளவரசர் திரு முகமது அப்துல் அலி, ஓய்வு பெற்ற நீதிபதி திரு எஸ். சுவாமிக்கண்ணு, டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் என்.மதனகோபால், டாக்டர் சி.வி. கிருஷ்ணசுவாமி, திரைப்படத் தயாரிப்பாளர் திரு ஜி.வெங்கடேஸ்வரன், திரைப்பட நடிகர் திரு எம்.என். நம்பியார், திரைப்பட நடிகை திருமதி ஆர்.மனோரமா, 'அமுதசுரபி' ஆசிரியர் டாக்டர் விக்கிரமன் திருமதி சாந்தி ரங்கநாதன், சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு கே.பி.கே. நம்பியார், சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு எஸ்.வேணுகோபால் ரெட்டி, செய்தி சுற்றுலாத் துறை முதன்மைச் செயலர் திரு கே.ஜே.எம்.ஷெட்டி, இ.ஆ.ப. ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.**

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறைச் செயலர் திரு கே.மலைச்சாமி, இ.ஆ.ப. அவர்கள் இந்தக் குழுவின் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.**

## காமராசர் மாவட்டம்:

# சீரிய முறையில் செயல்படும் சிறுசேமிப்புத் திட்டம்

''சிறு துளி பெரு வெள்ளம்'' என்பது போல, சிறுகச் சிறுகச் சேமித்து வருகின்ற பழக்கம் சிறு வயது முதற்கொண்டே ஏற்பட வேண்டும். இது நமது நாட்டிற்கும், நமது வீட்டிற்கும் பெரிதும் பயன் படும்.

இந்தியாவில், பொதுவாக அனைவரும் சிக்கனமாகத்தான் வாழ்ந்து வருகின்றனர். அண்மை ஆண்டுகளாக 21 முதல் 24 சதவீதம் வரை சேமித்து வருகின்றனர். சிக்கனத்திற்குப் பேர் பெற்ற ஜப்பான் மக்கள் தேசிய செல்வ உற்பத்தியில் 30 சதவீதம் வரை மிச்சம் பிடித்து சேமித்து உள்நாட்டு முதலீடுகளையும், பற்றாக்குறையையும் சமாளித்து வருகின்றனர்.

இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டுகளால் சிதைந்துபோன ஜப்பான் நகரம் இன்று உலகத்திலேயே தலைசிறந்த நாடாகக் காட்சி அளிக்கிறது. காரணம், அங்குள்ள மக்கள் கடினமாக உழைத்துச் சம்பாதித்து, ஒவ்வொருவரும் தங்களுடைய தேசிய நலனுக்காகச் சேமித்து வருகின்றனர். ஜப்பானுக்கு அடுத்தபடியாக, சேமிக்கும் பழக்கம் இந்தியாவில்தான் வளர்ந்து வருகிறது.

காமராசர் மாவட்டத்தில் சிறு சேமிப்புத் திட்டம் தீவிரமாகச் செயல் பட்டு வருகிறது. பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியரும் இந்தத் திட்டத்தில் சேர்ந்து சேமித்து வருகின்றனர். ''இளமையில் கல்'' என்பதுபோல மாணவ, மாணவியர் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமித்தலின் அவசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரைச் 'சஞ்சாயிகா' திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் முனைப்பு இயக்கங்களை நடத்தி, அனைத்துக் குடும்பங்களையும் சிறுசேமிப்புத் திட்டத்தில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்கள், தனியார் துறையில் பணியாற்றும் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் சம்பளத்துடன் கூடிய சேமிப்புத் திட்டத்தில் சேர்த்து, சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் பணிகளும் நடந்து வருகின்றன.

**சேமமுற வாழ்ந்திட சிறு சேமிப்பை நாம் கடைப்பிடித்திட வேண்டும். வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை நடத்தினால், வறுமையை விரட்டலாம். வளமையைச் சேர்க்கலாம்.**

இம்மாவட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிற்கு, சம்பளச் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 கணக்குகள். இது வரை 7,000 கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1989-90-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.11 கோடி ஆகும். மொத்த வசூல் ரூ. 16.05 கோடி, நிகர வசூல் ரூ.8.12 கோடி ஆகும். சிறுசேமிப்பு வசூலில் சாதனை புரிந்தமைக்காக, காமராசர் மாவட்டத்திற்கு அரசு அனுமதித்துள்ள ஊக்கத்தொகை ரூ.50.60 இலட்சம் ஆகும். 1990-91- ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 13 கோடியாகும். நிகர வசூல் 15.86 கோடி. 1990-91-ஆம் ஆண்டு இலக்கில் 122 விழுக்காடு சாதனை புரிந்து மாநிலத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இம்மாவட்டத்திற்கு அரசு அனுமதித்துள்ள ஊக்கத்தொகை ரூ.59 இலட்சத்து 86 ஆயிரம் ஆகும். பல்வேறு வளர்ச்சிப் பணிக்கு இந்த ஊக்கத்தொகை செலவிடப் பட்டுள்ளது.



27.8.91 அன்று விருதுநகர் காமராசர் வித்தயாசாலை நடுநிலைப்பள்ளியில், ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சிறுசேமிப்புத்துறை இயக்குநர் திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 562 முதலீட்டாளர்களுக்கு ரூ.77,919 ஊக்கத்தொகையும், 42 முகவர்களுக்கு ரூ.2 இலட்சத்து 37 ஆயிரம் ஊக்கத்தொகையும், 49 பேர்களுக்குப் பரிசுப் பொருட்களையும் வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

''காமராசர் மாவட்டத்திற்கு 1989-90-ஆம் ஆண்டிற்கும், 1990-91- ஆம் ஆண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட தொகையைத் திரட்டியதற்கு ஒரு கோடியே 10 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் வங்கிகளைக் காட்டிலும் அஞ்சலகங்கள் மொத்தம் 12 ஆயிரம் உள்ளன. மக்கள் சிக்கனத்தை மேற்கொண்டு வாழ்வில் செம்மையுறச் சேமிக்க வேண்டும். இந்தத் துறை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். அதன்மூலம் தான் எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்''.

இவ்விழாவில் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகங்காதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.



**நவராத்திரி என்றாலே பொம்மைக் கண்காட்சிகளே நம் நினைவுக்கு வரும். ஆண்டுதோறும் 'காதி கிராப்ட்' சார்பில் நடந்து வரும் 'பொம்மைக் கண் காட்சி' நம்மையெல்லாம் வெகுவாகக் கவரக்கூடிய ஒன்றாகும். அதை விளக்கு கிறது இந்தக் கட்டுரை.**



# பொம்மைக் கண்காட்சி

நவராத்திரி என்றாலே பொம்மைக் கொலுதான் நம் நினை வுக்கு வரும்.

கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள், நம் எண்ணத்தையும் ஈர்க்கும் வகையில், வகை வகை யாகக் காட்சியளிக்கின்றன அங்கே!

ஆம். சென்னைக் குறளகத்தில். 'காதி கிராப்ட்' ஆண்டுதோறும் நடத்தும் அற்புதப் பொம்மைக் கண் காட்சி தான் அது!

தமிழ்நாட்டுக் கைவினைஞர் களின் கைவண்ணத்தில் உருவான சிறிய பெரிய பொம்மைகள், சிறு வர்களை மட்டுமல்ல; பெரியவர் களையும் கவரும் என்பதில் ஐய மில்லை.

நாள்தோறும் நூற்றுக்கணக்கான ஆடவர் மகளிர் குழந்தைகள் கண் காட்சியைக் காணவருகின்ற காட்சி யைப் பார்க்கும்போது, பொம் மைகள் நம்மை எப்படியெல்லாம் கவருகின்றன என்பதற்கு அத்தாட்சி யாக விளங்குகின்றன.

மண், காகிதம், பீங்கான், கண்ணாடி, துணி ஆகியவற்றா லான பொம்மைகள் காட்சியில் ஏராளமாக இடம் பெற்றுள்ளன.

பொம்மைகள் எல்லாத் திறத் தாரையும் மகிழ்விக்கின்றன; அவற்றின் அழகில் மயங்காதார் யாரும் இல்லை. அவை எங்கெங் கெல்லாம் தயாராகி வருகின்றன?

சென்னையில் குயப்பேட்டை, கிண்டி, தென்னார்க்காடு மாவட்டத் தில் கடலூர், பண்ருட்டி, திண்டி வனம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களில்

பொம்மைகள் தயாரிக்கப்படுகின் றன. இந்தக் கண்காட்சியில் ரூ.2-லிருந்து ரூ.1,650 வரை விலையுள்ள பொம்மைகள் விற்பனைக்கு உள்ளன.

பொதுவாக, கிராமப்புற ஏழை எளிய மக்கள் - கைவினைஞர்கள் பொம்மைத் தொழில் மூலம் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கும், அதே சமயத்தில் கிராமப் பொருளாதாரம் உயரவும் வழி கோலுகிறார்கள்.

கண்காட்சியைப் பார்த்துக் கொண்டே வருகிறோம் -

இந்த ஆண்டு, புதிய வடிவமைப்புகளில் சிறப்பு வகைப் பொம்மைகள் காட்சிக்கு வந்திருக்கின்ற பாங்கினைப் பார்க்கிறோம்.

இராமாயணக் கதையை விளக்கிடும் பொம்மைகள், இதே - போல புத்திர காமேஷ்டி யாகம், அகல்யை சாப விமோசனம், வேளாண்மைத் தொழில் மற்றும் கிராமக் கைவினைஞர்களைச் சித்திரிக்கும் பொம்மைகள், பூம்புகார் சிற்பங்கள், பேரூர் கோவில் சிற்ப வடிவங்கள் ஆகியவை நுண்ணிய வேலைப்பாடுகளுடன் காட்சி தருகின்றன.

இவற்றுடன், யானை, புலி, மான் முதலான விலங்குகள், மயில், கிளி, அன்னம் முதலான பறவைகள், தென்னை, பனை முதலான மரவகைகள், கடவுளர் சிலைகள், தலைவர்களின் திருவுருவங்கள் முதலானவை காணக் கண்கோடி வேண்டும்!

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு, தம் கைத்திறமையால் அதை வளைத்தும் நெளித்தும் உருவாக்கிய கண்ணாடிப் பொம்மைகளும் நம் கண் முன்னாடி நிற்கின்றனவே!

பொம்மைக் கொலுவோடு, காதிகிராப்டில் வழக்கமாக விற்பனையாகும் உலோகம் முதலானவற்றாலான கலை நுணுக்கப் பொருள்களும் சேர்ந்து கண்காட்சிக்கு அணி சேர்க்கின்றன.

கிராமங்கள் என்கிறபோது, அங்கே குடிசைத் தொழில்களுக்குக் குறைவில்லை. குறிப்பாக, மண் பாண்டத் தொழில், அங்கே மலையாக வளர்ந்து வருவதைப் பார்க்கலாம்.







கலை நயம் மிக்க பூந்தொட்டிகள், தண்ணீர் ஜாடிகள், 'டெர கோட்டா' மாதிரிப் பொம்மைகள், மெருகேற்றிய மண்பாண்டங்கள், ஏழைகளின் குளிர்சாதனப் பெட்டிகள் (மண்ணாலான இவற்றில் காய்கறிகளைக்கெடாமல்பாதுகாத்து வைக்கலாம்) உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான நவீன பொருட்கள் மண்பாண்டத்தில் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே மண்பாண்டத் தொழில் மேம்பாட்டுக்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. மண்பாண்டத் தொழிலானது, வாரியத்தின் 3 அலகுகள், 99 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், 10,673 நிதி உதவி பெற்ற தொழிலாளர்கள் மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1990-91-ஆம் ஆண்டில் வாரியம் ரூ.12.80 கோடிக்கு மண்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது. இதுவரை 80,364 மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 37,400 பேர் மகளிராவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் மாற மாற கருத்துக்கள் மட்டுமல்ல; தொழிற் கருவிகளும் மாறத்தான் செய்கின்றன. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, கையால் மண்பாண்டம் செய்வதோடு, மின் விசையாலும் மண்பாண்டங்கள் செய்கின்ற வசதி இன்று ஏற்பட்டுள்ளது. ஆம். மின்விசையால் இயக்கக் கூடிய மட்பாண்ட 'ஷைலா' சக்கரம், இன்று பழக்கத்துக்கும் வழக்கத்துக்கும் வந்துவிட்டன.



அதிக அளவில், பல்வேறு மட்பாண்டப் பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு ஏற்ப, செவ்வாய்ப்பேட்டையில் 'மண்டல மட்பாண்டப் பயிற்சி நிலையம்' ஒன்று இயங்கி வருகிறது. தென் மாநிலங்களிலிருந்து வரும் மண்பாண்டக் கைவினைஞர்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் கால அளவு 5 மாதங்களாகும். பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

கிராமப் பகுதிகளில் உள்ள மட்பாண்டக் கைவினைஞர்கள் அப்பகுதிகளிலேயே பயன்பெறும் வகையில், தமிழகத்தில் 4 இடங்களில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. விலை மதிப்பற்ற - கலை நுணுக்கங்கள் நிறைந்த - தொன்மையான இந்த மட்பாண்டத் தொழிலை முற்போக்கு அடைந்து வரும் சமுதாயத்தினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொருட்களையும், பொம்மைகளையும் உற்பத்தி செய்வதில் வாரியம் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

உற்பத்தி அலகுகள், கூட்டுறவுச் சங்கங்கள், கைவினைஞர்கள் மூலம் உற்பத்தியாகும் பொம்மைகள் ஆண்டு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வந்தாலும், பெரும் அளவு விற்பனை நவராத்திரிப் பண்டிகைக் காலத்திலே தான் நடைபெறுகின்றது. களிமண் பொம்மைகளுடன் காகிதக் கூழில் தயாரிக்கும் பொம்மைகள் அதிக அளவில் வாரியத்தினால் விற்பனை செய்யப்படுகின்றன.

குறளகம் கதர் அங்காடியிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் விற்கப்படும் பொம்மைகளின் தரம் உயர்ந்தவையாகவும், கவர்ச்சிகரமாகவும் இருப்பதால், வாரியத்தின் பொம்மைகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

1989-ஆம் ஆண்டில், ரூ.12.76 இலட்சத்திற்குப் பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டன. 1990-ஆம் ஆண்டில், ரூ.18.10 இலட்சம் அளவிற்குப் பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாண்டில், நவராத்திரிக் கொலு விழாக் காலத்தில், பொம்மை விற்பனை இலக்கு ரூ.22.50 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறளகத்தில் நடைபெறும் இந்தப் பொம்மைக் கண்காட்சி, 7.9.1991 முதல் 17.10.1991 முடிய நடைபெறுகிறது. காலை 10 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறும் இந்தக் கண்காட்சி, கண்களுக்கு மட்டுமல்ல, கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன என்றால் அது மிகையல்ல!

**- பி.வி. கிரி.**

---

○ மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கின்றோமோ, மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று கருதுகின்றோமோ, மற்றவர்கள் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறோமோ,' அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். அது தான் ஒழுக்கம்.

—தந்தை பெரியார்

# போதையைத் துறந்தால் புது வாழ்வு!

**போ**தை மருந்துகளின் காரண மாக உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். நாக ரீகம் அடைந்த நமது சமூகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் போதை மருந்துகளைப் பற்றிய விழிப்புணர்வு அண்மைக் கால மாகப் பெருகி வருகிறது.

போதை மருந்து அபாயம், சுகா தாரத்தையும், நலவாழ்வையும் மட்டும் சீரழிப்பதில்லை; நமது சமூக- அரசியல் மற்றும் பொருளாதார அடித்தளத்தையேகூட அது அதிர வைத்து விடுகிறது!

போதை மருந்தின் பிடியில் சிக்காத உலக நாடுகளே இல்லை எனலாம்; இந்தியா மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? மேற்கே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் இணைந்த தங்கப்பிறை பகுதி இருப்பதாலும், தங்க முக்கோணம் என்றழைக்கப்படும் பர்மா, தாய் லாந்து, லாவோஸ் ஆகியன கிழக்குப் பக்கம் இருப்பதாலும் போதை மருந் துகளின் புழக்கமும், போக்குவரத் தும் நம்நாட்டில் தாராளமாகவே நடைபெறுகிறது!.

### சட்டப்பூர்வ நடவடிக்கை

போதை மருந்தை எதிர்த்து சமூக அளவில் போராடுவது ஒருபுற மிருக்க, அரசும் சட்டப்பூர்வ நட வடிக்கைகளை எடுத்து வருகிறது. 1985-ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட ''போதை மருந்துகள் மற்றும் மனநிலைக்கேடு மருந்துப்பொருள் சட்டம்'' இவ்வகையில் எடுக்கப் பட்ட முதல் நடவடிக்கையாகும். இதன்கீழ் கைது செய்யப்படுவோருக்குப் பத்து முதல் இருபது ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் ரூ.2 இலட்சம் வரை அபராதத் தொகை யும் விதிக்கப்படும்.

1989-ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் மூலம் இரண்டாம் முறை யாகக் குற்றம் நிரூபிக்கப்படுவோருக்கு மரண தண்டனை அளிக்க முடியும். போதை மருந்து தொடர்பான வழக் குகளை வேகமாகத் தீர்த்து வைப்ப தற்கும் நடவடிக்கை எடுக்கப்படு கிறது. சட்ட விரோதமான முறை யில் போதைப்பொருள் கடத்து வோர் அல்லது விற்போரின் சொத்து களைப் பறிமுதல் செய்வதற்கான வழிமுறையும் இந்தச் சட்டத்தில் உள்ளது.

1988-ஆம் ஆண்டு, போதைப் பொருள் கடத்துதல் மற்றும் மன நிலைக்கேடு மருந்துப்பொருள் விற் பனையை ஒழிப்பதற்காக 1988-ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு வரும் பெரும் புள்ளிகளையும், திரை மறைவுக் கூட்டங்களையும் இதன் மூலம் தடுப்புக் காவலில் வைக்க முடியும்.

அரசின் இந்தச் சட்டங்களினால், ஓபியம், ஹீராயின், கஞ்சா, ஹஷிஷ் முதலிய போதை மருந்துகளைப் பெருமளவில் கைப்பற்ற முடிந்தது. சுங்கம் மற்றும் மத்தியக் கலால், மாநில காவல் துறையின் போதைப் பொருள் தடுப்பு பீரோ, வருவாய் புலனாய்வுத் துறை உட்படப் பல அரசு அமைப்புகள் போதை மருந்து கடத்துதலைக் குறைத்திட முயன்று வருகின்றன.

என்னதான் சட்டங்களும், அரசு அமைப்புகளும் இருந்தாலும் நன் றாக ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பல் முனை ஒழுங்கு அணுகுமுறையின் மூலம்தான் போதை மருந்துப் பிரச் சினையை முற்றிலும் ஒழிக்க முடியும் என்றும் உணரப்பட்டுள்ளது.

### மறுபக்கம்

இந்தியாவைப் பொறுத்தவரை யில் போதை மருந்துப் பிரச்சி



னையை அணுகுவது, சம்பந்தப்பட்ட வரின் குடும்பத்தினரின் பிரச்சினை யாகவே இருந்து வந்திருக்கிறது. இருந்தபோதிலும் நிகழ்ந்துள்ள பல் வேறு சமூக-கலாச்சார-பொருளா தார மாற்றங்களினால் போதை மருந்துக்கு அடிமையானவர்களை மீட்கும் பணியில் அரசு தாராளமாக உதவிடும் நிலை தோன்றிவிட்டது. போதை மருந்துக்கு அடிமையான வர்கள் ஒரு சமூக சேவை அடிப் படையில் பொது அரசு மருத்துவ மனைகளில் சோதிக்கப்படுகிறார்கள். பெரும்பாலான மருத்துவமனைகளில் இவ்வகை நோயாளிகளுக்காக விரி வான வசதிகள் மனநிலை சிகிச் சைப் பிரிவினரால் அளிக்கப்படு கின்றன.

போதை மருந்து பயன்படுத்து வோர் இருவகையில் பாதிப்படை கிறார்கள். ஒன்று உடல்ரீதியான பாதிப்பு; மற்றது மனோரீதியான பாதிப்பு. போதை மருந்து பயன் படுத்துவது ஒரு மன-சமூக-மருத் துவப் பிரச்சினை என்று நம்பப் படுவதால் நோயாளிகளுக்கு இரு வகைகளில் சிகிச்சையளிக்கப் படுகிறது.

### இதர வழிமுறைகள்

போதை மருந்து நோயாளி களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணி யில் ஈடுபட்டுள்ள சமூக சேவை அமைப்புகளுக்கு அரசு நிதி உதவி அளித்துவருகிறது. குடும்பத்தை மையமாக வைத்துச் சமூக சேவையா ளர்கள் மூலம் போதைப் பொருள் இல்லாத வாழ்க்கையை ஏற்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த விஷயத்தில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முக்கியப் பங்கினை ஆற்ற முடியும். இந்தப் பிரச்சினை ஒரு நோய் போன்றதுதான். சரி யான சமயத்தில் சிகிச்சையளித்தால் புதுவாழ்வைப் பெறமுடியும் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும். போதையில் சிக்கித் தவிப்பவர் களைக் கரை சேர்ப்பதற்காகச் சமூக நல அமைப்புகள் மறுவாழ்வு முகாம் களை நடத்துகின்றன.

போதையைத் துறந்தால் புது வாழ்வு காணலாம்.

**என்.எஸ்.என்.முஹம்மது**
**(பத்திரிகைத் தகவல் அலுவலகம்)**

# நீரிழிவு நோய் - குணமும் நிவாரணங்களும்

'சர்க்கரை வியாதி' என்று இனிப்பாகக் குறிப்பிடப்படும் நீரிழிவு (Diabetes, Mellitus) நோய் பற்றிய உண்மைகள் மிகவும் கசப்பானவைகளாகும்.

அந்த வியாதிக்கு ஆளானவர்களில் பெரும்பாலோர் காலை இழந்திருக்கிறார்கள்; கையை இழந்திருக்கிறார்கள்; கண்பார்வையையே பறிகொடுக்கும் பரிதாப நிலைக்கும்கூட ஆளாகியிருக்கிறார்கள்.

நீரிழிவு நோய் எதனால் உண்டாகிறது?... அந்நோய்க்கு ஆளாவோர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை? ... அந்த நோயின் அறிகுறி என்ன?... உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் தன்மை நீரிழிவு நோய்க்கு இருக்கிறதா? என்பவை போன்ற மருத்துவ உண்மைகள் பலவற்றை அறிந்து கொள்ளுவதால் எல்லோருக்கும் நல்ல பலன் உண்டுதானே?

இதன் காரணமாகவே, டாக்டர். பி.எஸ்,. மோகன முருகன், எம்.டி., அவர்களைச் சந்தித்து நம்முடைய சந்தேக வினாக்களைத் தொடுத்தோம்; படித்தவர்கள் மட்டுமின்றிப் பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் அவர் விடையளித்தார். நீரிழிவு நோய் பற்றிய அந்த வினா-விடைத் தொகுப்பே இந்தக் கட்டுரை:

**ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்பட அடிப்படையான காரணம் என்ன?**

நம் உடம்பின் உள்ளே உள்ள முக்கிய உறுப்புகளில் ஒன்று கணையம் (Pancreas). அதில் உள்ள Betacells எனப்படும் திசுக்களிலிருந்து இன்சுலின் (Insulin) எனப்படும் கணைய நீர் சுரக்கிறது. நம் உடல் இயக்கத்திற்குத் தேவையான அந்த நீர் (Hormone).தேவைப்படும் அளவுக்குச் சுரக்காத நிலைமை ஏற்படுகிற போது நீரிழிவு நோய் உண்டாகிறது.

**அந்த நோய் இன்ன வயதினருக்குத்தான் ஏற்படும் என்று வயது வரம்பு ஏதாவது உண்டா?**

**எந்த வயதிலும் நீரிழிவு நோய் வரக்கூடும். இருபத்தைந்து, முப்பது வயது வரை வருகிற நீரிழிவு நோயை மருத்துவத் துறையில் 'இளமையான நீரிழிவு'** (Juvenile Diabetes) என்றும், அதற்கு மேற்பட்ட வயதினர்க்கு வருகிற நீரிழிவு நோயை 'முதிர்ந்த நீரிழிவு' (Meturity Onset Diabetes) என்றும் குறிப்பிடுகிறோம்.

**மனிதனுக்கு வரும் நோய்களில் நீரிழிவு நோயும் அபாயகரமான ஒன்றுதான். அந்த நோய் வருமுன் காப்பதும் வந்தபின் நடப்பதும் எப்படி என்று விளக்கப்படுகிறது. விளக்குபவர் டாக்டர் பி.எஸ்.மோகன முருகன் எம்.டி.**

சிலபேருக்கு ஒருவிதக் காரணமும் இல்லாமலே இரத்தக் கொதிப்பு ஏற்படுவதைப் போல - காரணம் ஏதுமில்லாமலே ஏற்படும் நீரிழிவு நோய் Primary Diabetes எனப்படும். காரணம் எதுவுமின்றி ஏற்படும் நீரிழிவே மக்களிடையே அதிகம் காணப்படுகிறது. கணையத்தில் கல் இருப்பது - கணையம் நோய்க் கிருமிகளால் தாக்கப்படுவது போன்ற காரணங்களால் வரும் நீரிழிவு Secondary Diabetes என்று சொல்லப்படும்.

ஆண்-பெண் என்கிற பால் வேறுபாடெல்லாம் இதற்கு இல்லை; இருபாலருக்கும் இந்த நோய் வரும்.

**நீரிழிவு என்பது தொத்து நோயா?**

அது ஒரு தொத்து நோயல்ல; பரம்பரை நோய். ஒருவரின் அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ அந்நோய் இருந்திருக்கும் பட்சத்தில், குறிப்பிட்ட அந்த நபருக்கும் நீரிழிவு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

**ஒருவருக்கு நீரிழிவு நோய் வந்திருக்கிறது என்பதை எப்படிப்பட்ட அறிகுறிகளை வைத்து நாம் தெரிந்து கொள்ளலாம்?**

அந்த நோய்க்கு ஆளானவருக்கு அடிக்கடி களைப்பு ஏற்படும்; அடிக்கடி சிறுநீர் பிரியும்; எதிர்பாராமல் பசி அதிகரிக்கும்; எப்போதும் போலச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், நோய் கண்டதும், உடல் மிகவும் இளைக்கத் தொடங்கும்; பார்வை மங்கும்; உடலில் புண் ஏற்பட்டால் ஆறவே ஆறாது; கைகள், கால்கள், தசைகளில் வலி ஏற்படும்- இப்படிப் பல அறிகுறிகள் உண்டென்றாலும் இவைகளே முக்கியமானவைகளாகும்.

**நீரிழிவு நோயாளிக்குப் புண் ஏற்பட்டால் ஆறாது என்பது ஏன்?**

நம் உடலில் உள்ள, நோய்க் கிருமி எதிர்ப்புச் சக்திக்கான செல் Phagocytes என்பதாகும்; நீரிழிவு



டாக்டர் பி.எஸ். மோகனமுருகன்




நோயாளி உடலில் உள்ள அந்த செல்லின் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுவதுதான், அவர்களுக்கு உண்டாகும் புண் ஆறாது என்பதற்கான முக்கியக் காரணம்.

குறிப்பாக - எல்லோரது உடலிலும் - காலின் கடைசிக்கோ, கை விரலின் கடைசிக்கோ போய்த்தான் இரத்தம் திரும்பி வரும். நீரிழிவு நோய் கண்டவருக்கு, அதேபோல இரத்த ஓட்டம் உடலெங்கும் சீராக இருக்காது. கால் அல்லது கைகளுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் மிகவும் குறைந்தால் அந்த நோயாளியின் கை அல்லது காலைத் துண்டிக்கும் நிலை ஏற்படும். அப்போதுதான், அதற்கு மேல் உடல் முழுவதும் நோய்க் கிருமிகள் பரவாமல் இருக்கும். அப்படித் துண்டிப்பதால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடாது; துண்டிக்காவிட்டால்தான் ஆபத்து.

அப்படி உறுப்பைத் துண்டிப்பதில் கூட, இரத்த ஓட்டம் சரியாக உள்ள இடத்தில்தான் துண்டிக்க வேண்டும்; அப்போதுதான் அந்த ரணம் ஆறும்; இல்லாவிட்டால், புண் ஆறாமல், நிலைமை மேலும் விபரீதமாகிவிடும்.

**இந்த வியாதி முற்றினால் கண் பார்வை போய்விடும்என்கிறார்களே; அப்படி ஆவது ஏன்?**

**சில சமயங்களில் கண்களில் உள்ள இரத்தக்குழாய் நீரிழிவு நோயாளிக்குப் பலவீனப் பட்டு விடும்; இதை விரைவில் கவனிக்காவிட்டால், விழித்திரை (Retina) துடிப்பாகிப் பார்வை மங்கிவிடும்; (Diabetie Retinopaathy) அறவே பார்வை போய்விடுவதும் உண்டு. ஆனால் சில சமயங்களில் லேஸர் (Laser) சிகிச்சை மூலம், விழித்திரையில்** நுண்ணிய துளைகள் இட்டு மீண்டும் அந்த நோயாளிக்குப் பார்வை கிடைக்கச் செய்துவிட முடியும்.

முக்கியமாகக் கண்ணுக்கு அந்த வகைச் சிகிச்சை அளிக்கும் கண் டாக்டர், முதலில் நோயாளிக்கு எதனால் பார்வை போயிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்ததுபோல் சிகிச்சையளிப்பார்.

நீரிழிவு நோயாளி தனக்கு எந்த நோய் ஏற்பட்டு எந்த டாக்டரிடம் போக நேர்ந்தாலும் சரி; முதலாவதாக அந்த டாக்டரிடம், தான் ஒரு நீரிழிவு நோயாளி என்பதைத் தெரிவித்துவிட வேண்டும். அப்போதுதான் அதற்கேற்றபடி மருந்து கொடுக்க அந்த டாக்டரால் முடியும்.

**எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நீரிழிவு நோய் வரும் என்று கூறமுடியுமா?**

இந்த விஷயத்தில் அப்படி எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. உடல் பருமனாக இருப்பவர்களுக்கு நீரிழிவு நோய் வரும்; அப்படிப் பருமனாக இருப்பவர்களும் நல்ல உடல் உழைப்பாளியாக இருப்பாரேயானால் நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியக் கூறு குறைவாகவே இருக்கும்.

சாப்பிடும் உணவின் அளவு ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஒருவர் பொதுவாக 2,000 முதல் 2,500 கலோரி வரை உணவு உட்கொள்ளலாம். அந்த அளவைக் கடந்து நாள்தோறும் சாப்பிட்டால், அதனால் கொழுப்புச் சத்து அதிகமாகி நீரிழிவு நோய் ஏற்படக்கூடும். ஆகவே, உணவைத் திட்டமாக உட்கொள்ளப் பழகவேண்டும்.

**சர்க்கரை அதிகம் சாப்பிட்டால் இந்த நோய் வரும் என்பது உண்மையா?**

அது அப்படியில்லை; குறிப்பாக எந்த உணவுப் பொருளை அளவு கடந்து அதிகம் சாப்பிட்டாலும் இந்நோய் வரும். உடனடியாக நம் உடலில் சர்க்கரைச் சத்தாக மாறும் பொருட்கள் உட்கொள்ளுவதை நாம் கட்டாயம் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோய் வந்த பிறகோ-சர்க்கரை, ஜீனி, கருப்பட்டி, வெல்லம் போன்றவை கூடவே கூடாது. திராட்சை, ஆப்பிள் பழங்களையும், இனிப்புப் பண்டங்களையும் அடியோடு விட்டுவிட வேண்டும். பீட்ரூட் போன்ற காய்கறிகளையும், கிழங்கு வகைகளையும் உண்ணாமல் தவிர்க்க வேண்டும்.

நம் இரத்தத்தில் அறவே சர்க்கரை இல்லாமல் போனாலும்கூட ஆபத்துதான். அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளான ஒருவரின் உடலில் வியர்வை பெருக்கெடுக்கும் (Hypoglycemia) கைகால்கள் வெடவெடவென்று நடுங்கும்; நெஞ்சில் தொடர்ந்து படபடப்பு ஏற்படும். இந்த அறிகுறிகள் ஏற்பட்ட ஒருவர், உடனே ஒன்று அல்லது இரண்டு டீஸ்பூன் சர்க்கரை போட்டு காபியோ, டீயோ சாப்பிடலாம்; பின்பு அந்த மாற்றங்கள் நீங்கி விடும். அதன்பிறகு, உடனே அவர் தகுந்த டாக்டரை அணுகி தன்னைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், உயிருக்கே ஆபத்தாகி விடும்.

**நகர மக்கள் - கிராம மக்கள் இருவரில் எந்தப் பிரிவினருக்கு நீரிழிவு நோய் அதிகம் வர வாய்ப்புள்ளது?**

இதில் நாம் அப்படிப் பேதம் பார்க்க முடியாது. ஆனால் - கிராம மக்களுக்கு உடல் உழைப்பு அதிகம் என்பதால், அவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புக் குறைவு என்று சொல்லலாம்.

**நீரிழிவு நோய் கண்டவர்களுக்கு என்னென்ன பாதிப்புகளெல்லாம் ஏற்படக்கூடும்?**

அ. சாதாரண மனிதர் ஒருவருக்கு உடல் வியர்த்து, நெஞ்சு வலித்து மாரடைப்பு ஏற்படும் என்றால் - சர்க்கரை வியாதி உள்ளவருக்கு அத்தகைய எந்த முன்



அறிகுறியும் ஏற்படாமலே திடீரென்று மாரடைப்பு ஏற்படலாம்.

ஆ. நீரிழிவு நோயாளியின் இதயத்திற்கு, இரத்தத்தைச் செலுத்தும் தன்மை (Pumping) குறைவு. அதாவது இதயம் சரியானபடி சுருங்கி விரியாது. இதனால் இருதயம் வீங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இ. நீரிழிவு நோயினால் சிறுநீரகமும் பாதிக்கப்படுகிறது. சிறுநீரில் உப்புச் சத்து வெளிப்படும்; இரத்தமும் வரும்; சிறுநீரகமும் நோய்க் கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாகும்.

ஈ. மூளையின் செயல்பாடுகள் பாதிக்கும். மூளையின் இரத்தக் குழாய்களில் அடைப்பு, இரத்தக் கசிவு போன்றவைகள் ஏற்படும்.

உ. உடலின் உறுதிக்குக் காரணமாக உள்ள எலும்புகள் பலவீனப்பட்டு விடும். எலும்புகளில் மிக எளிதில் தேய்மானம் உண்டாகும்.

ஊ. நீரிழிவு கண்டு நீண்ட காலமான ஆண்களுக்கு ஆண்மைக் குறைவும், பெண்களுக்குக் கருத்தறிக்க முடியாத நிலைமையும் ஏற்படும்.

எ. படை, தேமல், சொறி (Eczema) போன்ற தோல் வியாதிகள் உண்டாகும்.

ஏ. நீரிழிவு நோயாளியின் இரத்தத்தில் எதிர்ப்புச் சக்தி குறைவு என்பதால், அவர்களுக்கு க்ஷயரோகம் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

**நீரிழிவு ஒருவருக்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்று எப்படிப்பட்ட பரிசோதனைகளாலெல்லாம் தெரிந்து கொள்ள முடியும்?**

சிறுநீரில் சர்க்கரை இருக்கிறதா, இரத்தத்தில் உப்போ சர்க்கரையோ இருக்கிறதா என்பதை டாக்டர் குறிப்பிடுகிற காலத்தில் தவறாமல் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக-ஒருவருடைய இரத்தத்தில் சர்க்கரை இருக்கிறதா என்று பார்க்கும் பரிசோதனைதான் நீரிழிவு நிலை பற்றித் திட்டவட்டமாகத் தெரிவிக்கும்.

சில நோயாளிகளுக்கு Glucose Tolerance Test (G.T.T) தேவைப்படும். பொதுவாக எல்லோருக்குமே Glycosylated Hemoglobin (Hb-A1c) என்ற இரத்தப் பரிசோதனை நல்லது.




இத்தகைய பரிசோதனைகள் மூலம் தான் ஒருவரது உடலில் உள்ள நீரிழிவின் நிலை என்ன என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள முடியும்.

சர்க்கரை வியாதியால் மற்ற உறுப்புகள் - பாதிக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அறிவதற்காக, எக்ஸ்-ரே, ஈ.ஸி.ஜி. இரத்தக் கொழுப்புச் சத்து அளவு (Cholesterol), இரத்தத்தில் உள்ள உப்புக்களின் அளவு (Blood Urea, Serum Creetinine) சிறுநீர்ப் பரிசோதனை, கண் பரிசோதனை (Opthalmic Exam) ஆகிய முக்கியமான பரிசோதனைகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

**நீரிழிவு நோயாளிகளுக்கு, டாக்டர் என்ற முறையில் நீங்கள் கூறும் அறிவுரைகள் யாவை?**

அ. நீரிழிவு நோயாளிகள், காலில் செருப்பில்லாமல் - வெறுங்காலுடன் - வெளியே நடக்கக் கூடாது. உடலின் எந்தப் பகுதியிலும் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆ. உணவில் பச்சைக் காய்கறிகள், கீரை ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

இ. உடலைப் பிடித்தாற்போல, இறுக்கமான உடைகளை உடுத்திக் கொள்ளக் கூடாது.

ஈ. கொழுப்புச் சத்துள்ள பொருட்களை அதிகம் அல்லது அடிக்கடி உண்பதைத் தவிர்க்க வேண்டும். கொழுப்புப் பொருட்களில் பொதுவாக முழுமை அடையாத கொழுப்பு அமிலங்கள் (Unsaturated Fatty Acids) அதிகம் உள்ள சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய், நெல் உமி எண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய் முதலியவற்றைச் சமையலுக்குப் பயன்படுத்துவது நல்லது.

உ. தேங்காயெண்ணெய், நெய், டால்டா முதலியவற்றை முற்றிலும் தவிர்க்கலாம். பால், தயிர் மற்றும் மாமிசக் கொழுப்புப் பொருட்கள் குறைவாக உட்கொள்ள வேண்டும். கோழி, மீன் இவற்றில் ஆட்டிறைச்சியை விட குறைவாகக் கொழுப்பு உள்ளது. எனவே, அவற்றை உண்ணலாம்.

ஊ. சாப்பாட்டைப் பொறுத்த வரை ஒரே சீராக உணவு உட்கொள்ள வேண்டும். ஒரு நாள் அதிகமான அளவு உண்பதும் இன்னொருநாள் குறைவான அளவு உண்பதும் போன்ற மாறுபாடுகள் கூடாது.

எ. மருத்துவர் கூறும் அறிவுரைப்படி மாத்திரைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவில் உட்கொள்ள வேண்டும் அல்லது இன்சுலின் ஊசி தேவையெனில் போட்டுக் கொள்ள வேண்டும். தானாகவே மாத்திரைகளைக் குறைப்பதோ, அதிகப்படுத்திக் கொள்வதோ கூடாது. அம்மாதிரி செய்வதால் இரத்தத்தில் திடீரென சர்க்கரைச் சத்து குறைந்து அதனால் உயிரையே இழக்கும் அபாயம் உள்ளது.

ஏ. நீரிழிவு நோயாளி, ஒரு நாளைக்கு இருபது அல்லது முப்பது நிமிஷம் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அளவோடு உடற்பயிற்சியும் செய்யலாம். இவைகளை வாரம் முழுவதும் செய்ய இயலாவிட்டாலும், ஐந்து நாட்களாவது செய்வது நல்லது.

**நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் புதிதாக ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் யாவை?**

நாம் உபயோகிக்கும் இன்சுலின் ஊசியிலுள்ள மருந்து மாடு அல்லது பன்றியின் கணையத்திலிருந்து (Pancreas) எடுக்கப்பட்டதால், அதிலுள்ள அசுத்தப் பொருட்களால் (Impurities) சில சமயங்களில் ஒவ்வாமை (Allergy) மற்றும் இன்சுலின் வேலை செய்யாத தன்மை (Insulin Resistance) சிலருக்கு ஏற்படும் வாய்ப்புகள் இருந்தன. இதைத் தவிர்க்க, இப்போது Purified Insulins Preperations உள்ளன. Nordisulin Monosulin Insulatard Mixtard, Actranin, Monotard முதலான சுத்தம் செய்யப்பட்ட Porcine Insulins ஆகும். மேலும், முற்றிலும் அசுத்தப்

## சட்டப்பேரவையில் ....

★ தமிழ்நாட்டில், சிறுதொழில் நிறுவனங்களுக்கு நிலக்கரி வழங்குவதில் பற்றாக்குறை எதுவும் இல்லை என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு முகமது ஆசிப் அவர்கள் சட்டப் பேரவையில் (11.9.91) தெரிவித்தார்.

★ மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்களைச் சீர்திருத்தி இலாபத்தில் இயங்கச் செய்வது என்றும், அப்படிச் சீர்திருத்தவே இயலாத நிலையில் உள்ள நிறுவனங்களை மூடிவிடலாம்; தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவரும் இத்தகைய பொது நிறுவனங்களைத் தங்கள் நிறுவனத்துடன் நடத்தத் தனியார் முன் வந்தால் அவர்களுக்கு இந்த நிறுவனங்களை அளிக்கலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததாகச் சட்டமன்றத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் (11.9.91) தெரிவித்தார்.

★ அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 12,200 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன; இன்னும் சுமார் 4,400 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் எழுநூறு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது; இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டமன்றத்தில் (11.9.91) தெரிவித்தார்.

★ தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்; விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு வள்ளலார் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் (9.9.91) சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

★ திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து - திருச்சியைத் தலைநகராகக் கொண்டு திருச்சி மாவட்டமும், பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டமும், உருவாக்கப்படும்; இதற்கான ஏற்பாடுகள் அடுத்த ஆண்டில் செய்யப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் (11.9.91) சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

★ தமிழ்நாட்டில், ஐந்தாண்டுகளுக்குள், ஐந்தாம் வகுப்புவரை கட்டாயக் கல்வி வழங்கும் திட்டம் கொண்டு வரப்படும். அண்ணாவின் இருமொழிக் கொள்கைதான் அரசின் கொள்கை.தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும். தமிழ்நாட்டில் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவும், உயர்கல்வி மேம்பாட்டிற்காக மாநில உயர் கல்விக் குழுவும் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் அடுத்த ஐந்தாண்டுகளில் தொழில் நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக ரூ.400 கோடி செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. மத்திய அரசு மூலம், உலக வங்கியிடம் கடன்பெற்று இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் (13.9.91) அறிவித்தார்.

---

பொருட்களே இல்லாமல் உள்ள Humulin (Human Mono Component Insulins) Humulin-S, Humulin-I, ஆகியவை தற்போது எளிதில் கிடைக்கின்றன.

இரத்தத்தில் உள்ள Hb A1C (Glycosylated Hb) பரிசோதனை செய்வதன் மூலம் 3 மாதகாலமாக உள்ள நீரிழிவு நோயின் அளவைக் கண்டு கொள்ளலாம்.

மேலும், சிறுநீரிலும் இரத்தத்திலும் உள்ள சர்க்கரையின் அளவைத் தெரிந்து கொள்ளச் சிறிய தாள்கள் (Strips) உள்ளன. அவற்றைச் சிறுநீரில் நனைத்து எடுத்தும், மற்றும் இரத்தத்தைத் தாட்களின்மேல் இரண்டொரு துளி விட்டும் அதில் ஏற்படும் மாற்றத்தை வைத்துச் சர்க்கரையின் அளவை அறியலாம். Uristix Dextrostix முதலியவை சிறுநீரில் சர்க்கரையை அறியவும் Glucostix, Haemo Glucostest முதலியவை இரத்தத்தில் சர்க்கரையை அறியவும் உதவுகின்றன.

உறுப்புகள் மாற்றுச் சிகிச்சை போல், உதாரணமாகச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை போல் வேறு மிருகங்களில் இருந்து கணையத்தை எடுத்து மனிதனுக்குப் பொருந்தும் முயற்சிகள் நடந்துவருகின்றன.

இன்சுலின் மருந்து 24 மணி நேரம் தொடர்ச்சியாகத் தேவையான அளவு இரத்தத்தில் செலுத்தும் சக்தியுள்ள (Infusion Pump) போன்ற வசதிகள் வெளிநாட்டில் உள்ளன. நமது நாட்டில் அது இன்னும் பரவலாக உபயோகத்தில் இல்லை.

புதிதாகக் கலோரிச் சத்து இல்லாத இனிப்பூட்டிகள் (Aspartame) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மாத்திரை வடிவில் உள்ள இவற்றைச் சர்க்கரைக்குப் பதிலாக காபி அல்லது டீ மற்றும் பானங்களில் அளவோடு உபயோகித்துக் கொள்ளலாம். இவை Sugar Free 1 up மற்றும் Equal என்ற பெயர்களில் விற்பனையாகின்றன.

எது எவ்வாறாயிலும்; நீரிழிவு நோயாளிகள் அவ்வப்போது டாக்டர்களிடம் தமது உடலைப் பரிசோதித்துக் கொள்ளுவது நல்லது.



# மதுவின் தீமை பற்றி அண்ணல் காந்தியடிகள்

★ குடிப்பது ஒரு கெட்ட பழக்கம் என்பதைவிட, ஒரு வியாதி என்றே அதைச் சொல்லவேண்டும்.

★ என்னை ஒரு மணி நேரத்திற்கு இந்தியாவின் சர்வாதிகாரியாக நியமித்தால், நான் முதல் காரியமாகக் கள்-சாராயக் கடைகள் அனைத்தையும் நஷ்டஈடு தராமலேயே மூடிவிடுவேன்.

★ மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.

★ குடிப்பழக்கம் காரணமாகப் பேரரசுகளே அழிந்து போனதாக வரலாறு கூறுகிறது.

★ நம்மிடையே ஆயிரக்கணக்கில் குடிகாரர்கள் இருப்பதைவிட, இந்நாடு ஓட்டாண்டியாய் இருப்பதே எனக்குச் சம்மதம்.

★ பிறருடைய துன்பத்தைத் தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறோனோ, அவனே உண்மையான தொண்டன்.

★ குடிப்பழக்கம் நம் நாட்டிலிருந்து அகலுவதற்குச் சமூக ஊழியர்களும், சிறப்பாகப் பெண்கள் அனைவரும் மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும்.

★ கள்-சாராயத்தை அறவே ஒழித்துக் கட்டினாலன்றி, அதன் பிடியில் சிக்கியுள்ளவர்களைக் காப்பாற்ற முடியாது.

★ போதைப் பொருள்களின் முழு ஒழிப்பிற்காகச் சூறாவளிப் பிரச்சாரம் செய்வதைப் புனிதமான கடமையாகக் கொள்வீர்களாக!

★ மதுவை ஒழிப்பதற்கு மருத்துவர்கள் சரியான வகையில் உதவக் கூடும். இந்தச் சீர்திருத்தம் செய்வதில் பெண்களுக்கும் - மாணவர்களுக்கும் சிறப்பான உரிமையுண்டு.

★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக்கேடுதான்.

★ குடிப்பழக்கத்திற்கு இரையான ஒரு நாட்டுக்கு அழிவைத் தவிர வேறொன்றும் கிடையாது.

★ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால் குடிப்பழக்கத் தீமையை விலக்க வேண்டும்.

★ குடி என்பது வளர்ந்துகொண்டே வரும் ஒரு சமூகத்தீமை.

★ அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த்தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.

## தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.309.29 கோடி செலவில் ஏழு ஆண்டுக் காலத்திற்கு, இம்மாநிலத்தில் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம் என்ற பல துறைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக நிதி உதவியானது, 31.7.91 முதல் (கடனளிப்பு) நடைமுறைக்கு வருகின்றது என்று உலக வங்கி இப்பொழுது தெரிவித்துள்ளது.

உலக வங்கி மற்றும் அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்கம் ஆகியவைகளிடமிருந்து கடன் மற்றும் வரவு உதவி நிதி 112.8 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இந்தத் திட்டத்திற்காகக் கடனளிப்பு நடைமுறைக்கு வருவதன் மூலம், மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கி ஆகியவைகளுக்கிடையே 17.4.91 அன்று கையெழுத்திடப்பட்ட வளர்ச்சி வரவு ஒப்பந்தம் (The Development Credit Agreement) கடன் ஒப்பந்தம் (Loan Agreement) மற்றும் திட்ட ஒப்பந்தம் (Project Agreement) ஆகியவைகளும் நடைமுறைக்கு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், மாநில திட்டக் குழு வலுப்படுத்தப்படும். வேளாண்மைத் துறையும், கால்நடை பராமரிப்புத் துறையும் வலுப்படுத்தப்படும். இதோடுகூட, வன வளர்ச்சி, கிராமச் சாலைகள், கிராமக் குடிநீர் வழங்கீடு ஆகிய திட்டங்களுக்கு உதவிகள் அளிக்கப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டில் வேளாண்மை மேம்பாட்டு நிலைகளை உயர்த்தும்.



# வீர வரலாறு படைத்த செண்பகராமன்

திருவனந்தபுரத்தில், புத்தன் சந்தை என்ற ஊரில் சின்னச்சாமி பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மகனாக 15.9.1891-இல் தோன்றியவர் செண்பகராமன்.

திருவனந்தபுரத்தில் மகாராஜா பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே ஆங்கில அரசை எதிர்த்துப் புரட்சியில் இறங்கினார் செண்பகராமன். சக மாணவர்களை ஒன்று சேர்த்து வெள்ளையருக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினார்.

சுதந்திர வேட்கை மிக்க செண்பகராமனை உலகம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அவரது ஒளிமிக்க கண்கள் - வீரமிக்க தோற்றம் - உண்மை நிறைந்த செயல்கள் சர் வில்லியம் ஸ்டிரிக்லாண்ட் என்ற ஆங்கிலேயரைக் கவர்ந்தன.

திருவனந்தபுரத்தில், கால்நடை மருத்துவராகப் பணியாற்றிவந்த சர். வில்லியம், உண்மையில் ஜெர்மன் நாட்டின் உளவாளி. அவர், செண்பகராமனை அழைத்துத் தனது திட்டங்களை எடுத்துக் கூறினார். அந்தத் திட்டங்கள் செண்பகராமனைக் கவர்ந்தன. அந்தத் திட்டங்களை எளிதில் நிறைவேற்ற இயலாதபடி கண்காணிப்பும் அதிகமாக்கப்பட்டிருந்தது. என்றாலும் கண்காணிப்பையும் மீறி, சர் வில்லியத்துடன் திருவனந்தபுரத்தை விட்டு வெறியேறினார். பிறகு இலங்கைக்குச் சென்று, அங்கிருந்து ஒரு கப்பலில் இருவரும் இத்தாலி நாட்டுக்குச் சென்றனர்.

இத்தாலிக்குச் சென்ற செண்பகராமன் இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவற்றைப் பயின்றார். இத்தாலிய மொழியையும் கற்றார். மேலும், பல மொழிகளையும் கற்றார். பின்னர் சுவிட்சர்லாந்துக்குச் சென்று அங்கு கல்லூரியில் பயின்று சிறந்த மாணவராக விளங்கினார்.

***************

**"டாக்டர் செண்பகராமன் பிள்ளையின் சுதந்திரப் போராட்ட நினைவுகளைப் போற்றும் வகையில், அம் மாவீரனுக்கு உருவச் சிலையும் நினைவுச் சின்னமும் எழுப்பப்படும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் (14.9.91) அறிவித்தார். 'ஜெய்ஹிந்த்' செண்பகராமன் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதே இந்தக் கட்டுரை.**

***************

பொறியியலில் தேர்ச்சி பெற்று, டாக்டர் பட்டம் பெற்றார்.

சுவிட்சர்லாந்தில் அவர் அவ்வப்போது ஆற்றிவந்த சொற்பொழிவு அனைவரையும் கவர்ந்தது. இந்திய நாட்டில் அந்நிய ஆட்சியினர் நடத்திய அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் கனல்தெறிக்கும் விதத்தில் எடுத்துச் சொன்னார். இந்திய மக்களின்பால் சுவிஸ் மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முயன்றார்.

இந்திய நாட்டின் போராட்டம் குறித்து ஜெர்மன் நாட்டின் பல பகுதிகளிலும் சொற்பொழிவாற்றி வந்தார். அதன் விளைவு, அந்த நாட்டிலே 'இந்திய ஆதரவு சர்வ தேசக்குழு' என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தலைவராகப் பொறுப்பேற்று அரும்பாடு பட்டார் செண்பகராமன்.

ஐரோப்பிய நாடுகளிடையே இந்தியாவைப் பற்றிப் பரவியிருந்த தவறான கருத்துக்களை நீக்கினார். இந்தியாவின் நன்மைக்காகப் பாடு பட்டார். தமது எண்ணங்களத் தக்க விதத்தில் ஐரோப்பிய மக்களுக்குத் தெரிவிப்பதற்காக Pro India என்ற பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார்.

இந்தியா மட்டுமல்ல, உலகில் அடிமைப்பட்டுக் கிடக்கும் எந்த நாடாக இருந்தாலும் அதன் அடிமைத் தளை அகற்றப்படவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு League of Oppressed, People என்ற சங்கத்தைத் தொடங்கினார். இவற்றின் கிளைகளை நிறுவுவதற்காகப் பர்மா, சயாம், சீனா, எகிப்து, அமெரிக்கா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

1930-ஆம் ஆண்டில் செண்பகராமன் இந்திய வர்த்தகச் சங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றார். அந்தச் சமயத்தில் அவர், திருமதி காமா என்னும் வீராங்கனையின் மகளான லட்சுமிபாயைத் திருமணம் செய்துகொண்டார்.

வியட்நாம் நகரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் செண்பகராமன் கலந்துகொண்டார். அந்த மாநாட்டில் பங்கு பெற்ற நேதாஜி சுபாஷ் சந்திர போஸுடன் செண்பகராமனுக்கு நெருக்கம் ஏற்பட்டது.

நமது இந்திய நாட்டில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில், விடுதலைக்காக அறப்போர் நடை

பெற்றது; என்றாலும், ஒரு சிலர் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர். அத்தகைய தீவிரவாதிகளுக்கு, செண்பகராமன் ஜெர்மனியிலிருந்த வாறே ஆயுத உதவிகளைச் செய்தார்.

இந்திய ஆதரவு சர்வதேசச் சங்கத்தின் உறுப்பினர்களையும் ஆங் காங்கே, சிதறிக் கிடந்த இந்தியர் களையும் ஒன்று திரட்டி 'இந்தியன் நேஷனல் வாலண்டியர் கோர்ப்ஸ்' என்ற படை உருவாக்கப்பட்டது. இந்தப் படை, ஜெர்மன் அரசின் உதவியுடன் இந்தியாவை விடு விக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற உடன்பாடு கெய்ஸரால் உருவாக்கப்பட்டது.

*1914*-ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் தொடங்கியது. பிரிட்ட னுக்கும் ஜெர்மனுக்கும் இடையே கடும்போர் நடந்தது.

செப்டம்பர் **24**-ஆம் நாள், புகழ்பெற்ற எம்டன் என்னும் நீர்மூழ்கிக் கப்பல் சென்னைக்கு வந்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டை யைத் தாக்கிச் சென்று, ஆங்கில அரசைக் கதி கலங்கச் செய்தது. மாவீரன் செண்பகராமன்தான் அந்தக் கப்பலை இயக்கி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. சூயஸ் கால்வாயில் நின்று கொண்டி ருந்த பிரிட்டிஷ் கப்பல்கள் பல வற்றை நிர்மூலமாக்கிவிட்டே அவர் சென்னைக்கு வந்தார்.

சென்னையில் தாக்குதல் நடத் திய செண்பகராமன் அடுத்து புதுச் சேரி சென்றார். அங்கே, ஏற் கெனவே கிடைத்த தகவலின்படி, துறைமுகத்தில் காத்துக் கொண்டி ருந்த சுத்தானந்த பாரதியைச் சந் தித்து, அவரிடம் கைப்பெட்டி ஒன் றைக் கொடுத்து, சுப்பிரமணிய சிவாவிடம் சேர்க்கும்படி தெரிவித்து 'ஜெய்ஹிந்த்' என்று முழக்கமிட் டார். பின்னர் சிங்கப்பூர் சென்றார். துணிச்சல்மிக்க இந்தக் காரியங்களை அவர் ஆற்றும்போது அவருக்கு வயது *23* தான்.

பண்டித ஜவகர்லால் நேரு, மோதிலால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், தாதாபாய் நௌரோஜி ஆகியோர் செண்பகராமனின் ஜெர்மன் இல்லத்தில் விருந்தின ராகத் தங்கியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

ரஷ்யப் புரட்சியை உருவாக்கிய மாவீரன் லெனின் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டி ருந்தார்.

காபூலில் செண்பகராமன், முதல் சுதந்திர அரசை அமைத்த போது லெனின் அதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

செண்பகராமன் *26.5.1934*-இல் ஜெர்மனியில் மறைந்தார். அவர் மறைவதற்கு முன் தன் மனைவி லட்சுமிபாயைத் தன்னருகில் அழைத்து, தனது இறுதி இலட்சி யத்தை எடுத்துரைத்தார்:

'இந்திய நாட்டின் விடுதலை யைக் காணாமலே என் ஆவி பிரி யப் போகிறது. நான் இறந்த பின்னர் எனது சாம்பலைப் பாது காத்து வைத்து எனது பிறந்த நாட் டுக்கு எடுத்துச் சென்று, ஒரு பகுதி சாம்பலை என் அன்னையின் சாம்பல் சங்கமமான கரமனை ஆற்றில் கரைத்துவிடவும். மறு பகுதியை நாஞ்சில் நாட்டின் வள மிக்க வயல்களில் தூவிவிடவும். அது மட்டுமல்ல, பிரிட்டிஷ் அரசை நான் எதிர்த்துப் போராடியது போலவே, எனது மறைவிற்குப் பின்னர் நீயும் போராட்டத்தைத் தொடரவேண்டும்.'

- கணவரின் வேண்டுகோளை நிறைவேற்ற ஒப்புக் கொண்டார் லட்சுமிபாய்.

சென்னை பொது மருத்துவமனையின் சிறுநீரக மருத்துவத் துறைக்காக ரூ.*2* கோடி செலவில் ''லித்தோ டிரிப்டர்'' என்னும் நவீன கருவியும் ரூ.*1* கோடி செலவில் ஒரு ஸ்கான் கருவியும் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்தத் தொகை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ்.முத்துசாமி அவர்கள் *16.9.91* அன்று அறிவித்தார்.



★ நம்பிக்கை என்பது சிறு காற்றின் வேகத்தையும் தாங்காமல் துவண்டுவிழும் மெல்லிய மலரல்ல; அது, அடிபெயரா இமயத்தைப் போன்றது.

—காந்தியடிகள்

## அட்டைப்பட விளக்கம்...

**முதல் அட்டை:**

**அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, அவரது திருவுருவப் படம் முகப்பை அலங் கரிக்கிறது.**

**இரண்டாம் அட்டை:**

**தந்தை பெரியார் பிறந்த நாள் விழா, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்விழா நிகழ்ச்சிகள்.**

**கடைசிப் பக்க அட்டை:**

**தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா நிகழ்ச்சிகள்.**

தமிழ் வளர்த்த பெரியார்:

## நாடகத்தந்தை

# பம்மல் சம்பந்தனார்

**நா**டகத் தந்தை என்று நாட்டோரால் போற்றிப் புகழப்படும் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், தமிழ் நாடகத்திற்குப் புத்துயிர் ஊட்டி புதுமைகள் சேர்த்தவராவார்.

சம்பந்தனார் 1.2.1873 அன்று சென்னையில் பிறந்தார். பெற்றோர் விஜயரங்க முதலியார், மாணிக்கம்மாள்.

சம்பந்தனாரின் முன்னோர்கள் சென்னைக்கு அருகில் உள்ள பம்மல் என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆனால், இவரது தந்தையார் சென்னையில் பணி புரிந்ததால், அங்கேயே சொந்த வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டார். எண்.70, ஆச்சாரப்பன் தெருவில் உள்ள அந்தப் பழமையான வீட்டில் அவரது பேரப் பிள்ளைகள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

முதலில் சம்பந்தனார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தன் படிப்பைத் தொடங்கினார். 1880-இல் தமது ஏழாம் வயதில் சென்னை பிராட்வே யிலுள்ள இந்து புரொபஷன் பள்ளியில் சேர்ந்தார். 1882-இல் கீழ்ப்பாக்கத்திலிருந்த கோவிந்த நாயுடு பிரைமரி பள்ளியில் படித்தார். 1885-இல் இந்தப் பள்ளியின் இறுதி வகுப்பில் முதல்வராகத் தேறி, தங்கப்பதக்கம் பெற்றார்.

1887-இல் மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பி.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பாடத்தில் முதலாவதாக வந்து 'நார்த்ஸிக்' விருதைப் பெற்றார்.



சட்டக் கல்லூரியில் சேர்ந்து, 1896-இல் தேர்வில் வெற்றிபெற்று, சுந்தரம் சாஸ்திரியார் என்னும் வழக்குரைஞரிடம் பயிற்சி பெற்றார்.

இவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, பொம்மலாட்ட நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அப்போது இரு வெள்ளையர் நன்றாகக் குடித்துவிட்டு கலாட்டா செய்தனர். அதில் ஒருவன் மண்டை உடைந்தது. சிறுவனான சம்பந்தத்தின் மனத்தில் இந்நிகழ்ச்சி ஆழப் பதிந்தது. குடியினால் வரும் தீமையை உணர்ந்தார். அன்றையிலிருந்து குடியை வெறுத்தார். பிற்காலத்தில் மதுவை எதிர்த்து நாடகம் எழுதுவதற்கு அந்த நிகழ்ச்சி அடித்தளமாக அமைந்தது.

சின்னஞ்சிறு வயதிலேயே இவருக்குத் தெய்வபக்தி உண்டு. இவர் விளையாடும் பொம்மைகூட கடவுள் திருவுருவங்களாகவே இருந்தன. இவர் தந்தையார் மிகவும் கண்டிப்பானவர். குழந்தைகள் நல்ல பழக்கவழக்கங்களுடன் வளரவேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாய் இருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அவரே ஒரு முன் மாதிரியாகவும் விளங்கினார். இதை 'என் சுய சரிதை' என்னும் நூலில் சம்பந்தனாரே கூறக்கேட்டோம்:

''என் தகப்பனார் எங்களை மிகவும் கண்டிப்பான முறையில் வளர்த்து வந்ததற்குக் சில உதாரணங்களைக் கூறுகிறேன். தினம் காலை மாலைகளில் இத்தனை மணிநேரம் படிக்க வேணடுமென்று எங்களுக்குக் கட்டளை. அதன்படி படித்து விட்டோமானால் மற்ற வேளைகளிளெல்லாம் நாங்கள் இஷ்டப்படி விளையாடலாம். விடுமுறை தினங்களில் கட்டாயமாய் விளையாட வேண்டும். அதற்காக எங்களுக்கெல்லாம் கோலி, பம்பரம் முதலிய விளையாட்டுக் கருவிகளைத் தானே வாங்கிக் கொடுப்பதுமின்றி, தன் வயதையும் பாராமல் எங்களுடன் எங்கள் விளையாட்டுக்களில் கலந்து கொள்வார்.

'இன்னொரு உதாரணத்தை இங்கு எழுதுகிறேன். நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது, என் பால்ய சிநேகிதரான வி.வி.ஸ்ரீனிவாச

ஐயங்கார் என்னை அடிக்கடி பார்க்க வருவார். அச்சமயங்களில் நான் மேல் மாடியில் படித்துக் கொண்டு இருந்தால், அவரைக் கீழேயே நிறுத்தி 'சம்பந்தம் படித்துக் கொண்டு இருக்கிறான் 4 மணி வரையில் அவன் படிக்க வேண்டிய காலம்' என்று சொல்லி, அதுவரையில் அவருடன் பேசிக் கொண்டிருந்து, நான்கு அடித்தவுடன் அவரை மெத்தைக்கு அழைத்து வந்து என்னிடம் விட்டு நாங்கள் பேசுவதற்குத் தடையாயிருக்கலாகாதென்று கீழே போய்விடுவார்!'

சம்பந்தனார் வழக்குரைஞர் வேலையில் இருந்தபோது நிறைய சம்பாதித்தார். என்றாலும், அவருக்கு அத்தொழிலில் மிகுந்த ஈடுபாடு ஏற்படவில்லை. அவர் மனமெல்லாம் தமிழ் நாடகங்கள் எழுத வேண்டும், அவற்றில் நடிக்க வேண்டும் என்பதிலேயே இருந்து வந்தது.

இவர் தம் ஓய்வு நேரங்களில் சட்டப் புத்தகங்களைப் படிக்கவில்லை. 'சுகுண விலாச சபை' வளர்ச்சிக்காக உழைப்பதிலேயே நேரத்தைச் செலவழித்தார்.

சுமார் 25 ஆண்டுகள் இவர் வழக்குரைஞராகப் பணியாற்றி இருக்கிறார். அந்தச் சமயத்தில் எல்லாம் இவர் தனக்குத்தானே நிபந்தனை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். கட்சிக்காரர்கள் இவரிடம் வந்தால், அந்த வழக்குகளின் தன்மையை நன்கு ஆராய்ந்த பிறகே அவற்றை ஏற்றுக் கொள்வார். வருகிற வழக்கு பொய்யானது, தவறானது, நியாயமற்றது என்று இவர் மனதுக்குப்பட்டால், அவற்றைத் தயவு தாட்சண்யமின்றி ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுவார். 'சம்பந்தம் சாதாரணமாக தப்பான கேசுகளை எடுத்துக் கொள்ளமாட்டார்' என்ற பெயரே நிலைத்து வந்தது. 'குறுக்குக் கேள்விகள் கேட்பதில் வல்லவர்' என்று மற்றவர்களால் புகழப்பெற்ற சம்பந்தனார், 'சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல்' அமைந்து அவர்தம் வக்கீல் தொழிலை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது!'

சம்பந்தனார் தமது 51-வது வயதில் ஸ்மால்காஸ்கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவர் கடமையில் கண்ணுங்கருத்தாய் இருந்தார். முதல் நாள் இரவு தன் மனைவி இறந்தநிலையில் மறுநாள் அவரை அடக்கம் செய்துவிட்டு, நீதிமன்றத்துக்குப் போய் இருக்கிறார் சம்பந்தனார்! நீதிமன்றத்தில் பலர் கடிந்து கொண்டும், அவர்களுக்கு அவர் சாந்தமாக, 'இன்றைக்கு என் கோர்ட்டில் வாதிப் பிரதிவாதிகளும், சாட்சிகளும் சேர்த்து சுமார் நூறு பெயர்களிருக்கலாம். இத்தனைப் பெயர்களையும் மற்றொரு நாள் வரும்படியான கஷ்டத்திற்கு நான் அவர்களை உள்ளாக்கக் கூடாதென்று தீர்மானித்து வந்தேன் இங்கு...' என்று பதில் சொன்னாராம்.

1928-ஆம் ஆண்டு சம்பந்தனார் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெறுவதற்கு முன்பாகவே, வாழ்நாட்களை எப்படிக் கழிப்பது? என்று தினசரி அலுவல்

**தமிழ் நாடகங்கள் தரமாகவும் திறமாகவும் நடத்தப் படுவதற்கு ஏற்ப, சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்த நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனாரின் வாழ்க்கைச் சித்திரம் இங்கே வெளியிடப் படுகிறது.**

களைப் பட்டியல் போட்டுக் கொண்டாராம் அவர். அந்தச் சமயம் ஒரு பத்திரிகை நிருபர். இவரை அணுகி, 'இனி உங்கள் காலத்தை எப்படிக் கழிக்கப் போகிறீர்கள்? என்று கேட்டபோது, 'கடவுள் எனக்கு இனி அருளும் ஆயுட்காலத்தையெல்லாம் தமிழ் நாடகத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும் தொண்டு செய்யத் தீர்மானித்திருக்கிறேன்' என்றாராம். அன்று முதல் அவர் இறுதிக்காலம் வரையிலும் தமிழ் நாடக உலகிற்குத் தொண்டாற்றினார்.

தொடக்கத்தில் சம்பந்தனாருக்குத் தமிழ் நாடகங்கள் மீது அளவற்ற வெறுப்பே இருந்து வந்தது. இந்த வெறுப்பு நாளடைவில் மாறி, தமிழ் நாடகங்களை எழுத வேண்டும் என்னும் அளவுக்கு ஆர்வம் பிறக்கக் காரணமாயிருந்தது ஒரு நிகழ்ச்சியாகும்.

இவருக்குப் பதினெட்டு வயதான போது, அதாவது 1891-ஆம் ஆண்டில் பல்லாரியிலிருந்து, கிருஷ்ணமாசார்லு என்பவர் 'சரச வினோதினி சபா' என்னும் தனது நாடகக் கம்பெனியுடன் சென்னைக்கு வந்திருந்தார். சென்னை மூர்மார்க்கெட்டில் உள்ள விக்டோரியா பப்ளிக் ஹாலில் (வி.பி. ஹால் - அது இன்றும் உள்ளது) நான்கைந்து தெலுங்கு நாடகங்களை நடத்தினார்.

அப்போது நாடக சபைகள் பெருமளவில் இல்லாத சமயம். சென்னைக் கொத்தவால் சாவடிப் பகுதியில் எப்போதோ தெருக்கூத்து நடக்குமாம். செங்காங்கடையில் ஒரு ஓட்டுக் கொட்டகையில் தமிழில் புராண நாடகங்கள் நடக்குமாம். சுப்பையாச்சாரி என்பவர் ஹரிச்சந்திர நாடகம் நடத்துவாராம். ஹரிச்சந்திரனாக நடிப்பதில் தனக்கு இணையானவர் எவருமில்லை என்று கூறுவாராம் இவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கிருஷ்ணமாசார்லு நாடகம் சென்னையில் நடந்தது. நாடகத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சம்பந்தனாருக்குக் கொள்ளை ஆசை. அந்தச் சமயம் பார்த்து, இவரது தந்தையாருடைய நண்பர் ஒருவர், அந்த கிருஷ்ணமாசார்லுவையே இவரது இல்லத்துக்கு அழைத்து வந்தது, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று இவருக்கு.

வி.பி. ஹாலில் அன்று இரவு 'கிரகாரி' என்னும் நாடகம் நடக்க இருப்பதாகவும், அதற்கு வரும்படியும் இவரது தந்தையாரை அழைத்தார் அவர். அதற்குச் சம்மதித்த இவரது தந்தையார் சம்பந்தனாரையும் அழைத்து 'நாடகத்துக்கு வர விருப்பமா?' என்று கேட்டாராம். கரும்பு தின்னக் கூலியா என்ன? மகிழ்ச்சியுடன் சம்பந்தனார் வர ஒப்புக் கொள்ளவே அன்று இரவு நாடகம் காணப்புறப்பட்டார்.

இந்த நாடகம் எப்படி இருந்தது?

அதைச் சம்பந்தனாரே கூறக் கேட்போம்-

''ஹாலில் நுழைந்தது முதல் நாடகம் முடியும் வரையில், சற்றேறக் குறைய 5 மணி நேரமானபோதிலும், நாடக மேடையை விட்டு என் கண்களை எடுத்தவனன்று. அரங்கத்

தின் முன்பாகக் கட்டப்பட்டிருந்த திரையானது மேலே சென்றது முதல், கடைசியில் நாடகம் முற்றியபொழுது, அது மறுபடியும் விடப்பட்டது வரையிலும் நான் கண்ட காட்சிகள் பெரும்பாலும் என் ஞாபகத்தில் இன்றும் மறையாதபடி இருக்கின்றன.'

நாடகத்தைப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்துக்கூட அவருக்குத் தூக்கம் வரவில்லை. நாடகக் காட்சிகள் அவர் மனத்திரையில் மீண்டும் மீண்டும் தோன்றின. ஆம். அவர், விடியும் வரை தூங்கவே இல்லை!

அன்ற இரவே அவர் மனத்தில் ஒரு உறுதி பிறந்தது.

கிருஷ்ணமாசார்லுபோல, தாமும் தமிழில் ஒரு நாடக சபை ஏற்படுத்தி, அதில் தான் நடிக்க வேண்டும் என்பதே அந்த உறுதிமொழி.

அந்த உறுதிமொழி நிறைவேறிய நன்னாளும் வந்தது.

'எனது ஆயுளில் 1891-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி ஒரு முக்கியமான தினமாம். அதற்குக் காரணம், நான் தமிழ் நாடகங்கள் எழுதுவதற்கும் நடிப்பதற்கும் இன்றியமையாத முக்கிய காரணமாயிருந்த 'சுகுண விலாச சபை'யானது அத்தேதியில் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டதேயாம்'. என்று சம்பந்தனாரே மிக்க மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

பழைய புராண இதிகாச நாடகங்களையே திரும்பத்திரும்ப நடத்துவதை விட, புதிய புதிய நாடகங்கள் மேடைக்கு வரவேண்டும் என்று பெரிதும் விரும்பினார். புதிய தமிழ் நாடகங்கள் அரங்கேற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

அந்தக் காலத்தில் நாடகத்தை நடத்திய விதம் சம்பந்தனாருக்கு அறவே பிடிக்கவில்லை. காலம் தாழ்த்தி நாடகத்தைத் தொடங்குவது, அரைத்த மாவையே அரைப்பது, பின்பாட்டுப் பாடுவது, பக்க வாத்தியத்துடன் தாளம் போடுவது இவையெல்லாம் சம்பந்தனாருக்குப் பிடிக்கவில்லை. காலத்துக்கேற்ப புதிய முறைகளைப் புகுத்த அவர் எண்ணினார். நாடகத்தில் ஆபாசக் காட்சிகள் வருவதையும் வெறுத்தார், எதிர்த்தார். தம்முடைய புதுமைக் கருத்துக்



**நாடகம் ஒன்றில் சம்பந்தனார் இப்படித் தோன்றுகிறார்.**

களை நண்பர்களிடம் கூறியபோது சிலர் வரவேற்றார்கள்; சிலர் எதிர்த்தார்கள்.

அன்று நடந்த நாடகங்கள் பெரும்பாலும் பழைய வழக்கப்படியே எழுதப்பட்டிருந்தன.

குறை சொன்னால்தான் யாருக்கும் பிடிக்காதே! 'உனக்கு எப்போதும் குறை சொல்வதே வழக்கமாய் போயிற்று! குறை இல்லாதபடி நீதான் ஒன்றை எழுதிக் கொடேன்!' என்று சம்பந்தனாரின் நண்பர்களும் அவரைக் கோபித்துக் கொண்டார்கள். சம்பந்தனாரும் தயங்காமல் 'சரி' என்று ஒப்புக் கொண்டாராம்.

அன்று இரவெல்லாம் சம்பந்தனாருக்கு அதே சிந்தனை.

தன் தந்தையார் யோசனைப்படி, அன்று மறுநாள் கோவிந்தசாமிராவ் நாடகக் கம்பெனியார் நடத்திய 'ஸ்திரீசாகசம்' என்னும் நாடகத்தைப் போய்ப் பார்த்தார். நாடகத்தின் போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. கதை ஆரம்பமாவதற்கு முன்பு பாட்டுப் பாடுவது, இஷ்ட தேவதைகள் துதி, தாளத்துடன் பாட்டுப்பாடுவது முதலான காட்சிகள் அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்றாலும் நண்பர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?

சம்பந்தனார் தாம் பார்த்த 'ஸ்திரீ சாகசம்' கதையை நாடகமாக எழுதினார். அதுதான் 'புஷ்பவல்லி' என்னும் பெயரில் நடத்தப்பட்ட நாடகமாகும். இதுவே சம்பந்தனாரின் முதல் நாடகமாகும். இதில் மந்திரி குமாரன் புத்திசேனன் பாத்திரத்தில் சம்பந்தனார் நடித்தார்.

'புஷ்பவல்லி' நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முன்பாகவே, இன்னொரு நாடகத்தையும் எழுதித் தரும்படித் தூண்டினார்கள் நண்பர்கள். அதன் விளைவாக 'சுந்தரி அல்லது மெய்க்காதல்' என்னும் நாடகத்தை எழுதினார்.

இந்த இரண்டு நாடகங்களும், 1893-ஆம் ஆண்டு, வி.பி.ஹாலில் நடந்தது.

இந்த இரண்டு நாடகங்களை நடித்த வரையில் இவர்கள் சபைக்குக் கிடைத்த மாதாந்திர வரும்படி எவ்வளவு தெரியுமா? 5½ ரூபாய் மட்டுமே! அதில் 'பிடில் வாசிப்பதற்கு மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? 5 ரூபாய்! நாற்காலி, மேசை முதலியவற்றைத் தூசி இல்லாமல் துடைத்து, விளக்கேற்றி வைத்த வேலைக்காரனுக்குக் கொடுத்தது ½ ரூபாய். வரவு செலவு சரியாகப் போயிற்று. இப்படி அந்தக் காலத்தில் நாடகம் நடத்த அரும்பாடு பட வேண்டியிருந்தது.

ஒத்திகை நடத்தவும் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. அதற்கு இடம் தேடுவதே பிரச்சினையாக இருந்தது. ஒத்திகை நடக்கும்போது இருட்டிவிட்டால் மண்ணெண்ணெய் விளக்கு ஏற்றி வைப்பார்கள். சில நாள் சபா செயலாளர் வீட்டிலிருந்து எண்ணெய் கொடுத்தனுப்புவார். சில நாள் சம்பந்தனார் வீட்டிலிருந்து எண்ணெய் அனுப்பி வைப்பார்கள்.

'சுந்தரி' என்னும் நாடகத்திற்கு மட்டும் 53 ஒத்திகைகள் நடத்தப்பட்டிருக்கிறது. ஒத்திகைகள் ஆறு அல்லது ஏழு மணி வரை நடக்குமாம். முக்கியமாக, ஞாயிற்றுக் கிழமைகளில் ஒத்திகை நடக்கும்.

சித்திரை மாதக் கொளுத்தும் வெய்யிலில் பகல் ஒரு மணிக்கு, தமது வீட்டிலிருந்து ஒரு தகரப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஒத்திகை நடக்கும் இடத்திற்கு நடந்து போவாராம் சம்பந்தனார். அந்தத் தகரப் பெட்டியில்தான், தமிழ்

நாடகத்தந்தையின் உரையாடல்கள் இருந்தன!

பம்மல் சம்பந்த முதலியார், மூன்றாவதாக எழுதிய நாடகத்தின் பெயர் 'லீலாவதி-சுலோசனா' என்பதாகும். இதுவே இவர் எழுதிய நாடகங்களிலெல்லாம் மிகச் சிறந்தது என்று இவரது பால்ய நண்பர் நீதிபதி சீனிவாச ஐயங்கார் கருத்து கூறியுள்ளார். இவர் நாடகங்களை விமர்சிப்பதில் வல்லவர். இவரைப் பலவகைகளிலும் குருவாக ஏற்றுக் கொண்டிருந்தார் சம்பந்தனார்.

'லீலாவதி-சுலோசனா' 336 முறை நடத்தப்பட்டிருக்கிறது. இன்று 50 தடவை நடந்தாலேயே பெரிய விழாவாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் ஒரு நாடகம் இத்தனைத் தடவை நடந்திருக்கிறதென்றால், அது இமாலயச் சாதனையாகும்.

இந்த நாடகத்திற்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இதுதான், முதல் முதல் அச்சு ஏறிய நாடகமாகும். இதனை அச்சிடத் தூண்டியவரும் சீனிவாச ஐயங்கார் அவர்களே யாவார். 1895-இல் நூலாக வெளி வந்தது. அப்போது சம்பந்தனாருக்கு வயது 22.

இந்த நூலை வெளியிடுவதற்கு முன்பு, பல தமிழறிஞர்களிடம் இதைக் கொடுத்து, சாற்றுக்கவிகள் கேட்டிருந்தார். அவர்களும் மனமுவந்து வழங்கினார்கள். அவற்றையெல்லாம் நூலின் முதற்பதிப்பிலே சேர்த்து மகிழ்ந்தார் சம்பந்தனார். சாற்றுக்கவிகள் கொடுத்தவர்களுள் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் முக்கியமானவர்.

சம்பந்தனார், டாக்டர் உ.வே.சாமிநாதய்யரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதற்கு, அவரது சாற்றுக்கவியை நூலில் முதலாவதாக அமைத்துள்ளதே சான்றாகும்.

மேலும், இந்த நூலுக்கு, முதன் முதல் பி.ஏ. பட்டம் பெற்ற தமிழ் அறிஞர் திரு சி.வை. தாமோதரம் பிள்ளை. ஆசிரியர் திரு மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் ஆங்கிலத்தில் சான்றிதழ் வழங்கியுள்ளனர். இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த திரு சீனிவாச ஐயங்கார். இந்நூலுக்கு முகவுரைவழங்கிச் சிறப்பித்தார்.

சம்பந்தனார் எழுதிய 'நாடக மேடை நினைவுகள்' முதற்பாகம் 1932-இல் வெளிவந்தது. தொடர்ந்து ஆறு பாகங்களாக இது வெளிவந்தது. இவற்றின் மூலம் சம்பந்தனாரின் நாடக அனுபவங்களைத் தெள்ளத் தெளிவாக நாம் தெரிந்து கொள்கிறோம்.

இந்த நாடகம் 1893-இல் வி.பி. ஹாலில் நடந்தது. இரவு 9 மணிக்கு ஆரம்பமான இந்த நாடகம் அதிகாலை 3.30 மணிக்கு முடிந்தது. ஒரு விந்தை! அதாவது ஆறரை மணிநேரம் இந்நாடகம் நடந்தும், ஒருவர் கூட எழுந்து போகாததே யாகும்.

இந்நாடகத்தில், சம்பந்தனாரும் நடித்தார், பாட்டுப்பாடி.

சம்பந்தனார் நாடகங்களை எப்படி எழுதுவார்?

நாற்பது ஆண்டுகளாக, நாடகங்களையெல்லாம் பென்சிலைக் கொண்டே எழுதி வந்தார். இந்த வழக்கம் கடைசி வரை இருந்து வந்தது.

சம்பந்தனார், நாடகம் எழுதுவதற்கு முன்பு, எழுதவேண்டிய வசனத்தை நன்றாக மனப்பாடம் செய்து கொள்வார். பிறகு எழுத உட்காருவார். அவ்வாறு மனப்பாடம் செய்ததை எழுதி முடித்து விட்டால், மறுபடியும் எழுந்து அதற்குமேல் எழுதவேண்டியவற்றை 'மனப்பாடம் 'செய்ய, உலவிக் கொண்டே இருப்பார்.

இப்படி எழுத ஆரம்பிக்கும் போது, கை தடையின்றித் தாராளமாகப்போகும் என்கிறார் அவர். இதற்குப்பென்சிலினால் எழுதுவதே அவருக்கு இலகுவாக இருந்ததாம்.

இவ்வாறு தொடர்ந்து பல நாடகங்களை எழுதிக் கொண்டே இருந்தார். சம்பந்தனார் எழுதிய நூல்கள் மொத்தம் 99. இவற்றுள் நாடக நூல்களே மிகுதியாகும்.

சம்பந்தனார் படைப்பாளி மட்டுமல்ல, சிறந்த நடிகருங்கூட. அவரே பல நாடகங்களில் நடித்திருக்கிறார்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ் நாடகம் கீழ்நிலையில் இருந்தது. அதைக் கைத்தூக்கி விட்டவர் சம்பந்தனார். 'கூத்தாடிகள்' என்று இழிவாகப் பேசியோரின் வாயை அடைத்து, நடிகர்களை 'நாடகக் கலைஞர்கள்' என்று அழைத்துப் பெருமைப்படுத்தியவர் சம்பந்தனார்.

1924-இல் 'ஸ்மால்காஸ்கோர்ட் நீதிபதியானார். 1900-இல் சென்னைக் கபாலீஸ்வரர் கோயில் அறங்காவலராக இருந்து அரும் பணிகள் ஆற்றினார். சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் செனட் உறுப்பினராக இருந்தார். திரைப்படத் தணிக்கைக் குழுவிலும் ஓர் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

1916-இல் இவருக்குப் பிரிட்டிஷ் அரசு, ராவ்சாகிப் பட்டம் வழங்கியது. 1951-இல், பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது.

பம்மல் சம்பந்தனாரின் மகன் திரு ப. வரதராஜ் அவர்களை அண்மையில் சந்தித்தபோது (திரு ப.வரதராஜ் 24.4.1991 அன்று காலமானார்) அவர் கூறினார்-

'என் தந்தையார் அவர்களுக்கு, மேடை நாடகங்களிலெல்லாம் நான் உதவியாக இருந்திருக்கிறேன். சில நாடகங்களில் நடித்துமிருக்கிறேன்.

'என் தந்தையார், ஷேக்ஸ்பியர் நாடகங்களை நிறைய படித்துள்ளார். இவர் நாடகம் எழுதுவதற்கு இவை தூண்டுகோலாக இருந்திருக்கின்றன. அவர் இறுதிக்காலம் வரையிலும் எழுதிக் கொண்டே இருந்தார். அவரது சிந்தனையெல்லாம் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டுவதாகவே இருந்தது.'

சம்பந்தனார் திரைப்பட உலகிலும் நுழைந்தார். லீலாவதி சுலோசனா, சதி சுலோசனா ஆகிய திரைப்படங்களை இவர் இயக்கியும் உள்ளார். மனோகராவும் படமாக வந்தது. அதில் புருசோத்தமனாக நடித்தார், இவர். இவரது வேதாள உலகம், ரத்னாவளி ஆகிய நாடகங்களும் திரைப்படங்களாக வெளி வந்துள்ளன.

தமிழ் நாடக உலகின் தந்தையாக இருந்து, விந்தைகள் பலபுரிந்த வித்தகர் பம்மல் சம்பந்தனார் அவர்கள், 25.9.1964 அன்று இயற்கை எய்தினார். தமிழ் நாடக உலகம் இருக்கிற வரை அவரது நினைவும் நீக்கமற நிறைந்திருக்கும்.

**பி.வி. கிரி**

## அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்

### (இரு) பெருமாள்புரம்

### தொலைபேசி எண் கன்னியாகுமரி: 241

புதிதாக அமைக்கப்படும் தங்கள் இல்லங்களுக்கு தேவையான உறுதியான நிலை ஜன்னல்கள் உங்கள் இல்லத்தை அழகுபடுத்தும் தரமான பர்னிச்சர்கள் மற்றும் இரும்புச்சாதனங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், அலுவலகங்களுக்குத்தேவையான மர பர்னிச்சர்கள் மற்றும்இரும்புச் சாதனங்கள் ஆகியவற்றிற்கு குமரி மாவட்டத்தில் புகழ் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

அழகப்பபுரத்திலிருக்கும் எமது

கருமார் தச்சுத்தொழிற்கூடமே!

குறைந்த விலை! குறித்த நேர விநியோகம்!

உங்கள் நிறைவே எமது குறிக்கோள்!

உகந்த தரம்!

*விவரங்களுக்கு அணுகுங்கள்:*

*ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள்*
*அகஸ்தீஸ்வரம் (இரு) பெருமாள்புரம்*
*கன்னியாகுமரி மாவட்டம்*

With Best Compliments From:

# THANJAVUR TEXTILES LIMITED

**Regd Office:**

"Krishna Nivas"
28, Second Main Road
Gandhinagar
Adyar, MADRAS-600 020

Phone: 417340
Grams: GOODYARN
MILLS:
Vallam One Road
THANJAVUR-613005.

Phone: 22151, 22021,
22024, 22223

Telex: 0468-204 YARN IN

**Manufacturers of HIGH QUALITY YARN**
**COUNTS: 20s to 100s**
**(Hosiery & Warp)**



ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23










